உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com
077 120 9996
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



# உதயன்

சுடர் : 41
கதிர் : 199

சனிக்கிழமை
13 ஜூன் 2026

வைகாசி 30 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50


## சீரற்ற காலநிலை நாட்டில் தொடரும்

கொழும்பு, ஜூன் 13
நாட்டின் பல்வேறு பகுதிகளில் நிலவும் சீரற்ற காலநிலை அடுத்த சில நாள்களுக்குத் தொடரும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் முன்னறிவித்தல் விடுத்துள்ளது. இது தொடர்பில் இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

»11



## எமது காணிகளை விட்டு இராணுவமே வெளியேறுக

### வலி.வடக்கு மக்கள் நேற்றும் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 13
வலிகாமம் வடக்கு பகுதியில் இராணுவத்தின் பிடியிலுள்ள தமது காணிகள் விரைவில் விடுவிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தி அந்தப் பகுதி மக்கள் நேற்றுப் போராட்டம் நடத்தியுள்ள

»11

# கிளிநொச்சிப் பாடகர் சங்கீத்சனுக்குப் பிணை

### நீக்கப்பட்டது பயங்கரவாதக் குற்றச்சாட்டு
### மூன்று தடவைகள் எடுக்கப்பட்ட வழக்கு

யாழ்ப்பாணம், ஜூன் 13
பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த கிளிநொச்சிப் பாடகர் சங்கீத்சனை பிணையில் செல்ல சாவகச்சேரி நீதவான் நீதிமன்றம் நேற்று அனுமதி வழங்கியுள்ளது.

»11

சுகாதாரச் சீர்கேடான

## ஐஸ்கிறீமால் வினை; ஒருவருக்குச் சிறை!



யாழ்ப்பாணம், ஜூன் 13
சுழிபுரம் பகுதியில் சுகாதாரச் சீர்கேட்டுடன் ஐஸ்கிறீம் விற்பனையில் ஈடுபட்டவருக்கு 6 மாதங்களுக்கு ஒத்திவைத்த 6 மாதகாலசிறைத்தண்டனையை நீதிமன்றம் விதித்துள்ளது. சங்கானை சுகாதார மருத்துவ அதிகாரி

»11

## ஆளுநரின் தலையீட்டாலேயே இடமாற்றப்பட்டார் நீதிபதி

### கஜேந்திரகுமார் எம்.பி. விளாசல்



யாழ்ப்பாணம், ஜூன் 13
யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி ஏ.ஜி.அலெக்ஸ்ராஜாவின் இடமாற்றத்தில் வடமாகாண ஆளுநரின் அப்பட்டமான அரசியற் தலையீடு உள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குற்றஞ்சாட்டியுள்ளார்.

»11

## கல்விச் சீரமைப்புப் பணிகளை ஒரு மாதத்தில் நிறைவுசெய்க!

விரிவு பக்கம்:- 05

வடமராட்சியில்

## தீயணைப்புப் பிரிவு அதிகாரிகள் ஆய்வு

விரிவு பக்கம்:- 07

## போதைமாத்திரைகளுடன் இளைஞர் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், ஜூன் 13
அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஆவரங்கால் பகுதியில் போதை மாத்திரைகளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

»11

நெடுந்தீவிலிருந்து

## கடற்றொழிலுக்குச் சென்ற மீனவரொருவர் மாயம்!

### தேடல் பணிகள் தீவிரம்

யாழ்ப்பாணம், ஜூன் 13
யாழ்ப்பாணம் - நெடுந்தீவிலிருந்து நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இரவு மீன் பிடிக்கச் சென்ற மீனவர் ஒருவர் காணாமற்போயுள்ள நிலையில், அவரைத் தேடும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:- நெடுந்தீவு தாளைத்துறையிலிருந்து நேற்றுமுன்

»11

## 350 இனைத் தாண்டியது செம்மணி என்புத்தொகுதி

### நேற்றும் 12 என்புத் தொகுதிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 13
செம்மணி மனிதப் புதைகுழியில் அடையாளம் காணப்பட்ட என்புத்தொகுதிகளின் எண்ணிக்கை 350 இனைத் தாண்டியுள்ளது. செம்மணி மனிதப்புதைகுழி மீதான மூன்றாம்கட்ட அகழ்வுப் பணிகளின் 23 நாள் நடவடிக்கைகள் நேற்று இடம்பெற்றன. நேற்றையதினம் 12 என்புத் தொகுதிகள்

»11






மக்கள் ... தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

| லொத்தர் | திகதி | சீட்டிழுப்பு இலக்கம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | மேலதிகம் |
|---|---|---|---|---|---|
| கொவிசெத | 12.06.2026 | 4458 | I | 55 59 73 79 | விசேட எழுத்து: I |
| ஹந்தஹன ராசி சுப பலன் | 12.06.2026 | 1525 | | 09 21 36 37 | வெற்றி இலக்கினம்: ரிஷபம் |
| NLB ஜய | 12.06.2026 | 0484 | J | 6 7 2 5 | |
| மெகா பவர் | 12.06.2026 | 2564 | U | 11 18 36 73 | சுப்பர் இலக்கம்: 19 |
| மஹஜன சம்பத | 12.06.2026 | 6216 | F | 4 8 1 9 7 0 | |
| தன நிதானய | 12.06.2026 | 2246 | U | 18 36 76 78 | விசேட எழுத்து: U |
| சுப தவசக் | 12.06.2026 | 0332 | | 18 25 35 | வெற்றி இலக்கினம்: சிம்மம் |

# இறைவரி திருத்தச்சட்டம் ஜூன் 3 முதல் நடைமுறை

கொழும்பு, ஜூன் 13

**உள்நாட்டு இறைவரி நிர்வாகத்தை வலுப்படுத்தும் நோக்கில், 2026 ஆம் ஆண்டு 11 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி (திருத்தப்பட்ட) சட்டம் கடந்த ஜூன் 3ஆம் திகதி முதல் உத்தியோகபூர்வமாக நடைமுறைக்கு வந்துள்ளது என்று உள்நாட்டு இறைவரித் திணைக்களம் அறிவித்துள்ளது.**

இந்தப் புதிய திருத்தங்களின்படி, குறிப்பிட்ட சில மோட்டார் வாகன விற்பனை இலாபத்துக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளதுடன், மூலதன இலாப வரி தனிநபர்களுக்கு 15 வீதமாகவும், அறக்கட்டளைகள் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு 30 வீதமாகவும்
திருத்தப்பட்டுள்ளது. மாதத்துக்கு 100,000 ரூபாவுக்கு மேற்பட்ட சேவைக் கொடுப்பனவுகளுக்கான 5 வீதம் தடுத்து வைக்கப்படும் வரி வரம்புக்குள் இணையத் தொழில்நுட்ப வல்லுநர்கள், சமூக ஊடக நிபுணர்கள், கலைஞர்கள் மற்றும் எழுத்தாளர்கள் உள்ளிட்டோர் புதிதாக உள்வாங்கப்பட்டுள்ளனர்.
இனிமேல் வரி செலுத்துவோர் மதிப்பீட்டு வரி அறிக்கைகளை சமர்ப்பிக்க வேண்டியதில்லை. அவற்றுக்குப் பதிலாக, முந்தைய ஆண்டின் வரிப்பொறுப்பின் அடிப்படையில் காலாண்டு தவணைக்கட்டணங்கள் கணக்கிடப்படும். குறிப்பிட்ட நிபந்தனைகளின் கீழ் ஆயுள் காப்புறுதித் தொகைகளுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளதுடன், நிலுவையிலுள்ள அசல் வரித்தொகையை 2026 ஆம் திகதி டிசெம்பர் மாதம் 2ஆம் திகதிக்கு முன்னர் முழுமையாகச் செலுத்துவோருக்கு வட்டித் தள்ளுபடியும் வழங்கப்படவுள்ளது. வங்கிக்கணக்கு ஆரம்பித்தல், வாகனப்பதிவு, வணிகப்பதிவு மற்றும் கடன் அட்டைகளைப் பெற்றுக்கொள்ளுதல் போன்ற முக்கியமான பரிவர்த்தனைகளுக்கு வரி செலுத்துவோர் அடையாள எண் சமர்ப்பிப்பது இனி கட்டாயமாக்கப்பட்டுள்ளது. (எ-இ)

| சுபிரி தன சம்பத | |
|---|---|
| திகதி | 12.06.2026 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| வெற்றி வாரம் | 0924 |
| ஆங்கில எழுத்து | P |
| வெற்றி இலக்கம் | 4 1 4 4 5 2 |

| Super Ball | |
|---|---|
| திகதி | 12.06.2026 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 3190 |
| ஆங்கில எழுத்து | U |
| வெற்றி இலக்கம் | 01 49 58 72 |

| சனிதா | |
|---|---|
| திகதி | 12.06.2026 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | H |
| வெற்றி இலக்கம் | 38 75 76 80 |
| வெற்றி வாரம் | 5351 |

| SASIRI | |
|---|---|
| திகதி | 12.06.2026 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| வெற்றி வாரம் | 1020 |
| வெற்றி இலக்கம் | 20 34 38 |

| லக்ன ராசி | |
|---|---|
| திகதி | 12.06.2026 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| ராசி | கும்பம் |
| வெற்றி இலக்கம் | 02 08 25 35 |
| சீட்டிழுப்பு வாரம் | 4902 |

| KAPRUKA | |
|---|---|
| திகதி | 12.06.2026 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | B |
| சுப்பர் இலக்கம் | 06 |
| வெற்றி இலக்கம் | 13 50 57 60 |
| வெற்றி வாரம் | 2366 |

| அத கோடிபதி | |
|---|---|
| திகதி | 12.06.2026 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | L |
| வெற்றி இலக்கம் | 20 42 45 73 |
| வெற்றி வாரம் | 3016 |

## ரூபாவின் பெறுமதி மேலும் வீழ்ச்சி!

கொழும்பு, ஜூன் 13
அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் மதிப்பு நேற்று மேலும் வீழ்ச்சியடைந்தது.
இலங்கை மத்திய வங்கி நேற்று வெளியிட்ட தினசரி நாணய மாற்று வீத அறிவிப்பின்படி, அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 331.42 ரூபாவாகவும், அதன் விற்பனை விலை 341.36 ரூபாவாகவும் காணப்பட்டது. நேற்றுமுன்தினம் இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்பட்ட நாணய மாற்று வீதங்களின்படி, அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 327.67 ரூபாவாகக் காணப்பட்டது. டொலர் ஒன்றின் விற்பனை விலை 337.82 ரூபாவாகக் காணப்பட்டது. (எ-இ)

## வருணவை கைதுசெய்ய தற்போதுதிட்டம்இல்லை

சட்டமா அதிபர் நீதிமன்றுக்கு தெரிவிப்பு!

கொழும்பு, ஜூன் 13
பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின்கீழ், சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் வருண ஜயசுந்தரவைக் கைதுசெய்வதற்கோ அல்லது தடுத்து வைப்பதற்கோ எந்தவொரு தீர்மானமும் எடுக்கப்படவில்லை என சட்ட மா அதிபர் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு நேற்று அறிவித்துள்ளார்.
உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகள் தொடர்பில், நியாயமான காரணங்களின்றி தம்மைக் கைதுசெய்வதைத் தடுக்கும் உத்தரவொன்றைப் பிறப்பிக்கக் கோரி, வருண ஜயசுந்தரவால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இந்த மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே, சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி நீதிமன்றத்துக்கு இந்த விவரத்தை உத்தியோகபூர்வமாக அறிவித்தார். (எ-இ)



## ஏறி இறங்கும் தங்க விலை!

கொழும்பு, ஜூன் 13
இலங்கையில் நேற்றுத் தங்கத்தின் விலை அதிகரித்தது என்று அகில இலங்கை நகையக வியாபாரிகள் சங்கம் தெரிவித்தது.
நேற்றுமுன்தினம் 24 கரட் தங்கம் ஒரு பவுண் 370,000 ரூபாயாவாக விற்பனை செய்யப்பட்ட நிலையில், நேற்று 10,000 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு 380,000 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டது.
நேற்றுமுன்தினம் 22 கரட் தங்கம் பவுண் ஒன்று 340,400 ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட நிலையில் நேற்று 9200 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு 349,600 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டது. (எ-இ)

## நீதிபதி வெற்றிடங்களை நிரப்பக்கோரிக் கடிதம்

கொழும்பு, ஜூன் 13
உயர் நீதிமன்றத்தில் தற்போது நிலவும் நீதிபதி பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதில் ஏற்பட்டுள்ளதாமதம் தொடர்பாகக் கவனம் செலுத்தி, அந்த வெற்றிடங்களை உடனடியாக நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கக் கோரி, எதிர்க்கட்சி நடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்ட கடிதம் ஒன்று சபாநாயகரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. நேற்று நாடாளுமன்றத்தில் வைத்து இந்தக் கடிதம் சபாநாயகர் கலாநிதி ஜகத் விக்ரமரத்னவிடம் கையளிக்கப்பட்டுள்ளது. அரசமைப்புச் சபையின் தலைவர் என்ற ரீதியில், ஜனாதிபதியின் கவனத்துக்கு இந்த விடயத்தைக் கொண்டு சென்று, நீதிமன்றத்தின் சுயாதீனத்தன்மையைப் பாதுகாக்கவேண்டும் என்று கோரியே எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இந்தக் கடிதத்தைச் சபாநாயகரிடம் ஒப்படைத்துள்ளனர். (எ-இ)

## விஜயலாலுக்கு பிணை அனுமதி

கொழும்பு, ஜூன் 13
ஊழல் குற்றச்சாட்டுத் தொடர்பாக இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவால் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த தென் மாகாண முன்னாள் முதலமைச்சர் ஷான் விஜயலால் டி சில்வாவுக்கு கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்றுப் பிணை அனுமதி வழங்கியது.
இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு மற்றும் சந்தேகநபர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் முன்வைத்த சமர்ப்பணங்களைப் பரிசீலித்த பின்னரே கொழும்பு நீதவான் அசங்க எஸ். போதரகம இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார். சந்தேகநபர் தலா 50 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் செல்ல அனுமதித்த நீதிமன்றம், சந்தேகநபருக்கு வெளிநாட்டுப் பயணத் தடை விதித்ததுடன், அவரது கடவுச்சீட்டை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவும் உத்தரவிட்டது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சிறுவர் தொழிலாளர்கள் அதிகரிக்கும் அபாயம்!

**கொழும்பு, ஜூன் 13**

**இலங்கையில் நிலவும் தற்போதைய சூழ்நிலைகளுக்கு மத்தியில், பிள்ளைகள் சிறுவர் தொழிலாளர்களாக ஈடுபடுத்தப்படும் அபாயம் அதிகரித்துள்ளது என்று தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சுட்டிக்காட்டியுள்ளது.**

ஜூன் 12 ஆம் திகதி கடைப்பிடிக்கப்படும் 'சிறுவர் உழைப்பிற்கு எதிரான சர்வதேச தினத்தை' முன்னிட்டு அதிகாரசபையின் தலைவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிகாரசபையின் தரவுகளின் படி, 2025 ஆம் ஆண்டில் சிறுவர் உழைப்பு தொடர்பாக 173 முறைப்பாடுகளும், யாசகம் பெற வைத்தமை தொடர்பாக 287 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன. சர்வதேச தொழிலாளர் அமைப்பின் வரையறைக்கு இணங்க, 16 வயதுக்குக் குறைந்த பிள்ளைகள் கட்டாயக் கல்விக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்பதுடன், அவர்களை எவ்வித வேலைகளிலும் ஈடுபடுத்தக் கூடாது. 16 முதல் 18 வயதுக்கு இடைப்பட்டோரை ஆபத்தான மற்றும் இரவு நேரப் பணிகளில் அமர்த்துவது முற்றிலும் தடைசெய்யப்பட்டுள்ளது.

பிள்ளைகளை வீட்டுப் பணிப் பெண்களாக அமர்த்துவது, பிச்சை எடுக்க வைப்பது, வீதி வியாபாரம் மற்றும் சைபர் தொழில்நுட்பம் ஊடாகச் சுரண்டுவது போன்றன தண்டனைக்குரிய குற்றங்களாகும். பிள்ளைகளின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான 71 ஆபத்தான வேலைவாய்ப்புகள் தற்போது அடையாளம் காணப்பட்டுள்ளன.

சிறுவர் உழைப்பை ஒழிப்பதற்காக, பாடசாலைச் சிறுவர் பாதுகாப்புக் குழுக்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர் தூதுவர்கள் மூலமாக நாடு தழுவிய ரீதியில் இந்த வருடம் முழுவதும் விழிப்புணர்வுத் திட்டங்களை முன்னெடுக்க அதிகாரசபை நடவடிக்கை எடுத்துள்ளது. (எ-இ)

## சோதனையில் சிக்கிய போதைச் சாரதிகள்!

கொழும்பு, ஜூன் 13

பயணிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கில், தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனம் மற்றும் ஹொரணை பொலிஸார் இணைந்து நடத்திய விசேட போதைப்பொருள் சோதனை நடவடிக்கையின் போது 10 பஸ் சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஹொரணை நகரிலிருந்து பயணிக்கும் இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் பஸ்களை இலக்கு வைத்து இந்த அதிரடிச் சோதனை முன்னெடுக்கப்பட்டது. இதன் போது 150 பஸ்கள் பரிசோதிக்கப்பட்டதில், 10 சாரதிகள் போதைப்பொருள் பாவித்துள்ளமை ஆரம்பகட்ட சோதனைகளில் கண்டறியப் பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களிடம் ஹொரணை பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளதுடன், அவர்களை ஹொரணை நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். (எ-இ)

## குளிரூட்டிய ட்ரக் வண்டியப்பானால் அன்பளிப்பு



கொழும்பு, ஜூன் 13

ஜப்பான் அரசாங்கத்தின் 200 மில்லியன் யென் நிதியுதவியிலான பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத் துக்கு ஆறு குளிரூட்டப்பட்ட ட்ரக் வண்டிகள் உத்தியோக பூர்வமாக ஒப்படைக்கப்பட்டுள் ளன. இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் அகியோ இசொமதா, கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் முன்னிலையில் கூட்டுத்தாபனத்தின் தலைவரிடம் இவ்வாகனங்களை ஒப்படைத்தார். இந்தத் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மற்றும் திருகோணமலையில் மூன்று பனிக்கட்டி தயாரிக்கும் இயந்திரங்களும் வழங்கப்படவுள்ளன. வடக்கு, கிழக்கிலிருந்து கொழும்புக்கான மீன் விநியோகத்தின்போது ஏற்படும் 40 வீதமான இழப்புகளைத் தடுத்து, குளிர்பதனச் சங்கிலித் திறனை வலுப்படுத்துவதே இதன் நோக்கமாகும். இந்த உதவிக்கு அமைச்சர் சந்திரசேகர் ஜப்பானுக்கு நன்றி தெரிவித்ததுடன், இது இருநாட்டு நட்புறவின் மைல்கல் என்றும் குறிப்பிட்டார். (எ-இ)



## மின்னலால் தாக்கப்பட்ட ஸ்ரீலங்கன் விமானம்

கொழும்பு, ஜூன் 13

கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து அவுஸ்திரேலியாவின் சிட்னி நகர் நோக்கி நேற்று அதிகாலை புறப்பட்ட ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் விமானம் மீது மின்னல் தாக்கியதால், 40 நிமிடப் பயணத்தின் பின்னர் மீண்டும் அவசரமாக தரையிறக்கப்பட்டுள்ளது.

217 பயணிகள் மற்றும் 16 பணியாளர்களுடன் அதிகாலை 1 மணிக்கு புறப்பட்ட யு.எல். 606 என்ற ஏர்பஸ் ஏ-330 ரக விமானமே இவ்வாறு மின்னல் தாக்கத்துக்கு உள்ளானது. இதனால், விமானி உடனடியாகச் செயற்பட்டு அதிகாலை 1.40 மணியளவில் விமானத்தை மீண்டும் கட்டுநாயக்கவில் பாதுகாப்பாகத் தரையிறக்கினார்.

இதையடுத்து, மாற்று விமானம் மூலம் பயணிகள் அனைவரும் சிட்னி நகருக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். அத்துடன், மின்னல் தாக்கிய விமானம் பழுதுபார்ப்புக்காகப் பொறியியல் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (எ-இ)




## இஞ்சையும் பூட்டுங்கோவன்!

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில மக்கள் வங்கியின்ர ஏ.ரி.எம். மிசின் ஒண்டு திறந்து வைச்சிருக்கினம். உண்மையில இந்த மிசினைப் போட்டதால வருத்தக்காரருக்கும், அவையைக் கூட்டிக்கொண்டு வாறவைக்கும்,பராமரிக்கிறவைக்கும் இவ்வளவு நாளா இருந்த அலைச்சல் இல்லாமல் போயிருக்குது. வருத்தக்காரருக்கோ, அவையைப் பராமரிக்கிறவைக்கோ, கூட்டிக்கொண்டு வாறவைக்கோ ஏதும் ஆத்திரம் அவசரத்துக்கு கையில காசில்லாட்டி, ஆஸ்பத்திரிக்கு வெளியால போய்த்தான் அங்கையுள்ள ஏ.ரி.எம்.மிசின்களில கார்ட்டைப் போட்டுக் காசை எடுக்கவேணும். ஆனால் அப்பிடி ஆஸ்பத்திரியை விட்டு வார்ட்டில இருக்கிற வருத்தக்காரர் போகேலாது. வேற ஆரிட்டையும் கார்ட்டைக் குடுத்து விட்டுத்தான் காசை எடுப்பிக்கோனும். இந்தக் காலத்தில பிறத்தியாரை நம்பி கார்ட்டையும், அதின்ர 'பின்' நம்பரையும் குடுக்கவும் ஏலாது. அதோட ஆஸ்பத்திரியில இருந்து வெளியில போறவை பிறகு திரும்ப செக்கியூரிட்டிமாரைத் தாண்டி உள்ளுக்க வாறதெண்டால் அதொரு பெரும்பாடு. இப்ப ஆஸ்பத்திரியோட ஏ.ரி.எம். மிசின் வந்ததால இந்தக் கஷ்டங்களுக்கெல்லாம் ஒரு விடிவுகாலம் வந்திட்டு. இப்பிடி வருத்தக்காரரின்ர கஷ்டத்தை அறிஞ்சு, உள்ளுக்க ஏ.ரி.எம். மிசின் போடோணுமெண்டு நினைச்ச பணிப்பாளரையும், அதுக்கு உடனேயே ஓமெண்டு சொல்லி தங்கட ஏ.ரி.எம். மிஷினைப் பூட்டின மக்கள் வங்கிக்காரரையும் எல்லாரும் பாராட்டத்தான் வேணும்.

அந்தப் பாராட்டோட இன்னுமொரு கோரிக்கை. இப்பிடி ஆஸ்பத்திரியில உள்ள வருத்தக்காரருக்காக ஏ.ரி.எம். மிசினைப் பூட்டி அவையின்ர கனநாள் குறையைத் தீர்த்தமாதிரி, வலி.மேற்கு மக்களின்ர குறையையும் உந்த வங்கியள் தீர்த்தால் பெரும் புண்ணியமாப் போகும். வலிகாமம் மேற்கில பண்டத்தரிப்பு, சங்கானை, வட்டுக்கோட்டை இந்த மூண்டு இடத்திலையும் தான் ஏ.ரி.எம். மிசின் இருக்கு. அதுக்கு அங்கால சித்தன்கேணி, தொல்புரம், சுழிபுரம், மூளாய், பொன்னாலை, அராலி எண்டு வலிகாமம் மேற்கின்ர முக்கால்வாசி இடத்தில இருக்கிறவை இப்பிடி கார்ட் போட்டு காசு எடுக்கோனும் எண்டா மைல்கணக்கில அலைய வேண்டியிருக்கு. இந்த இடைப்பட்ட ஏரியாவில வங்கிக்கிளையளும் இல்லை. ஆனால் இந்த ஏ.ரி.எம். மிசின் இல்லாத பகுதியளிலதான் சனத்தொகையும் கூடவா இருக்கினம். அவையள் ஒவ்வொரு நாளும் காசு தேவையெண்டால் ஆறேழுமைலுக்கு அங்கால இருக்கிற சங்கானைக்கோ, பண்டத்தரிப்புக்கோ, வட்டுக்கோட்டைக்கோ தான் போகவேண்டியிருக்கு. இதால நேரம் தான் வீணாகுது எண்டு அங்கத்தைச் சனங்கள் குறைப்படுகினம்.

இந்தக் குறையைத் தீர்க்க,ஏதுமொரு வங்கி மனம் வைக்கவேணும். இஞ்ச பெரியாஸ்பத்திரியில ஏ.ரி.எம். மிசினைத் திறந்தமாதிரி சுழிபுரம் சந்திக்குக் கிட்டவா இருக்கிற பாணாவெட்டி ஆஸ்பத்திரியில ஒரு ஏ.ரி.எம். மிசினைத் திறந்தால் அந்த ஆஸ்பத்திரிக்கு வாறவைக்கும் உதவியா இருக்கும், அங்கத்தைச் சனத்துக்கும் பிரியோசனமாயிருக்கும், வங்கியளுக்கும் வருமானம் கூடுமெல்லோ. ஒருக்கா உரியவை இதைப்பற்றி யோசிச்சு,நல்லமுடிவா எடுத்தால் எல்லாருக்கும் நல்லது கண்டியளோ!

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media







# சங்கீத்சனை விடுவிக்கக்கோரி மன்னாரில் பெரும் போராட்டம்

மன்னார், ஜூன் 13

பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிராகவும், சொல்லிசைப் பாடகர் சங்கீத்சனை விடுவிக்கக் கோரியும், மன்னார் அரச பேருந்துத் தரிப்பிடத்துக்கு முன்பாக நேற்றுமுன்தினம் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இலங்கை தமிழரசுக் கட்சியின் மன்னார்க் கிளையின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து, பொது அமைப்பினர், சிவில் அமைப்பினர், மன்னார் பிரஜைகள் குழுவினர், மன்னார் மாவட்ட காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்தினர், அரசியல் பிரதிநிதிகள் மற்றும் பெண்கள் அமைப்பினர் பங்கேற்றனர்.

நாட்டில் நடைமுறையிலுள்ள பயங்கரவாதத் தடைச்சட்டம் இரத்துச் செய்யப்பட வேண்டும், கைதுசெய்யப்பட்ட பாடகர் சங்கீத்சன் உட்பட பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டு, நீண்டகாலமாக சிறையில் உள்ள அனைவரும் விடுதலை செய்யப்பட வேண்டும் என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோரிக்கை விடுத்தனர். அமைதியான முறையில் பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டநிலையில், திடீரென அவ்விடத்துக்கு வருகை தந்த, மன்னார் பொலிஸார் பதாகை ஒன்றில் எழுதப்பட்ட வசனம் ஒன்று குறித்து சிறிதுநேரம் விசாரணை மேற்கொண்டனர். பதாகையில் தமிழில் எழுதப்பட்ட வசனம், சிங்கள மொழியில் வாசித்துக் காட்டப்பட்ட நிலையில், பொலிஸார் அவ்விடத்தில் இருந்து அகன்று சென்றனர். (சு-56)

# இன மோதல்களை உருவாக்கவே பயங்கரவாதத் தடைச்சட்டம் நடைமுறை

## அருட்தந்தை மாக்கஸ் தெரிவிப்பு

மன்னார், ஜூன் 13

அரசியல் மற்றும் இனவாத நோக்கங்களுக்காகவே பயங்கரவாதத் தடைச் சட்டம் நடைமுறையிலுள்ளது. இதனால் பிரிவினை, இனமோதல்கள் இன்னும் அதிகரித்துச் செல்கின்றது. எனவே இந்தச் சட்டத்தை நீக்கி, மக்களுக்கு சுதந்திரத்தை வழங்கவேண்டும் என்று மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை மாக்கஸ் அடிகளார் தெரிவித்தார்.

மன்னாரில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

இந்த நாட்டில் பிரச்சினைகள், இனவாதம் வேரூன்றுவதற்குக் காரணமாக, பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம் உள்ளது. மக்கள் சம நிலையோடு, சமத்துவத்தோடு, மனித உரிமைகளோடு வாழ்வதற்கு இந்தச் சட்டம் தடையாகவுள்ளது. அரசியல் நோக்கங்களுக்காகவும், இனவாத நோக்கங்களுக்காகவும் இந்தச் சட்டம் பயன்படுத்தப்படுவதால், இந்தச் சட்டம் இந்த மண்ணில் இருந்து அகற்றப்படவேண்டும். அனைத்து இன மக்களும் இந்த நாட்டில் சமாதானமாக வாழ்வதற்கு, ஒரு ஒழுங்கான சட்டத்தைக் கொண்டுவரவேண்டும். அதேவேளை அருட்தந்தை ஜீவந்த பீரிஸ் வரலாற்றில் நடந்த அனைத்தும் இன அழிப்பு என்ற உண்மைகளை வெளிப்படுத்தியுள்ளார். அவருடைய அனுபவப்பகிர்வு முற்றிலும் உண்மை. அதேவேளை கொழும்பு மறைமாவட்டத்தின் குருவாகப் பணியாற்றுகின்ற அருட்தந்தை ஜூட் கிரிஷாந்த, பயங்கரவாதிகளைக் கொல்வதே போரின் நோக்கமே தவிர, இன அழிப்பின் நோக்கமாக இருக்கவில்லை என்று ஒரு மனித உரிமை மீறலான கருத்தை வெளியிட்டிருப்பது கத்தோலிக்க சமூகத்துக்கும், இலங்கை வாழ் மக்களுக்கும் அதிர்ச்சி அளித்துள்ளது. 70 வருடங்களாக பல இடங்களில், வடக்கு, கிழக்கில் திட்டமிட்ட முறையில் தமிழ் மக்கள் அழிக்கப்பட்டமை, சர்வதேச ரீதியிலும் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதனை மறைக்கமுடியாது. அதேபோன்றே ஈஸ்டர் தாக்குதல் திட்டமிட்ட முறையில் நடந்தமை உலகறிந்த உண்மை. எனவே குற்றவாளிகள் நீதியின் முன் நிறுத்தப்பட்டு, அவர்களுக்கு உரிய தண்டனை வழங்கவேண்டும். இது பற்றிய விசாரணைகளை குழப்புகிற நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றோம்-என்றார். (சு-56,213)

# வருடாந்தத் திருவிழா

யாழ்ப்பாணம், ஜூன் 13

புங்குடுதீவு மேற்கு 4ஆம் வட்டாரம் பிட்டியம்பதி ஸ்ரீ காளிகா பரமேஸ்வரி அம்பாள் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 10 தினங்கள் இடம்பெறும் திருவிழாக்களில், எதிர்வரும் 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தேர்த்திருவிழாவும், மறுநாள் திங்கட்கிழமை காலை 8 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (க)

யாழ்ப்பாணம், ஜூன் 13

வடமராட்சி தென்துன்னையம்பதி ஸ்ரீ கௌரி அம்பாள் சமேத சிவ பூதேஸ்வரர் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. எதிர்வரும் 21ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்குத் தேர்த்திருவிழாவும், மறுநாள் திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (க்)

# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். முக்கியமான பிரமுகர்களின் அறிமுகமும் அவர்களால் ஆதாயமும் கிடைக்கக்கூடும். ஆனால், புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும்.

**இடபம்:** அதிர்ஷ்டகரமான நாளாக இருக்கும். சகோதரவகையில் ஆதாயம் ஏற்படக்கூடும். உறவினர்கள் வருகையால் வீட்டில் சிறுசிறு சலசலப்புகள் ஏற்படக்கூடும். எதிர்பார்த்த பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**மிதுனம்:** தெய்வ அனுக்கிரகம் நிறைந்த நாளாக இருக்கும். நீண்டநாள்களாக எதிர்பார்த்து ஏமாந்த பணம் இன்று கைக்குவந்து மகிழ்ச்சி தரும். சிலருக்கு மகான்களைத் தரிசிக்கவும் அவர்களுடைய ஆசிகளைப் பெறவும் வாய்ப்பு ஏற்படும்.

**கடகம்:** மனதில் சஞ்சலம் ஏற்பட்டு நீங்கும். தாயின் தேவையை நிறைவேற்ற சிறிது அலையவேண்டியிருக்கும். சிலருக்குப் பயணங்களால் அனுகூலம் உண்டாகும். இன்று வியாபாரம் வழக்கம்போலவே இருக்கும்.

**சிம்மம்:** மகிழ்ச்சி தரும் நாளாக இருக்கும். வாழ்க்கைத்துணையுடன் ஏற்பட்டிருந்த மனவருத்தம் நீங்கி அந்நியோன்யம் அதிகரிக்கும். வெளியூர்ப் பயணங்களைத் தவிர்க்கவும். தந்தைவழியில் சில செலவுகள் ஏற்படக்கூடும்.

**கன்னி:** புதிய முயற்சிகள் அனுகூலமாக முடியும். குடும்பப் பொறுப்புகளை நிறைவேற்றுவதில் அலைச்சலும் சோர்வும் உண்டாகும். சகோதர வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**துலாம்:** உற்சாகமான நாளாக இருக்கும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். குடும்பத்தில் பெரியவர்களின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும்.

**விருச்சிகம்:** மனதில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். தாய்வழியில் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். வாழ்க்கைத்துணையுடன் அனுசரித்துச் செல்லவும். தாய்மாமன்மூலம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**தனுசு:** புதிய முயற்சி சாதகமாகமுடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். கணவன்-மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மகரம்:** சகோதரர்கள் உதவி கேட்டு வருவார்கள். சிலருக்குக் கோயில் களுக்குச் சென்று வழிபாடுகளில் கலந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படக்கூடும்.

**கும்பம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவேண்டிய நாள். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். சிலருக்கு நவீன டிசைனில் ஆடைகள் வாங்கும் வாய்ப்பு ஏற்படும்.

**மீனம்:** இன்று புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. உறவினர்கள் வருகை சில சங்கடங்களைத் தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை




## மின்சக்தியும் இலங்கையும்..!

*2030ஆம் ஆண்டளவில் இலங்கையின் 70 வீதமானமின்கட்டமைப்பு புதுப்பிக்கத்தக்கமின்சக்தியை மையப்படுத்தியதாக அமையும் என்று நாடாளுமன்றத்தில் வைத்து வாக்குறுதி வழங்கியுள்ளார் பிரதமர் ஹரிணி அமரசூரிய. அரசாங்கங்கள் மாறினாலும் சில பொதுக்கொள்கைகளில் எவ்வித மாற்றமும் வருவதில்லை. பரஸ்பர புரிதலின் அடிப்படையில் அந்தத் திட்டங்கள் தொடர்ச்சியாகச் செயற்படுத்தப்படும். இலங்கையில் அவ்வாறாக ஏற்றுக்கொள்ளப்பட்ட திட்டங்களில் ஒன்றுதான் புதுப்பிக்கப்பட்ட மின்சக்தி. எனவே, 2030ஆம் ஆண்டளவில் 70 வீதமான மின் கட்டமைப்பை புதுப்பிக்கத்தக்க மின்சக்தியாக மாற்றும் திட்டங்கள் தற்போதும் அமுலாக்கத்தில் உள்ளன என்று பிரதமர் ஹரிணி தெரிவித்துள்ள கருத்து மிகவும் முக்கியமான விடயம்.*

இலங்கைக்கும் மின்சக்திக்கும் இடையிலான போராட்டம் மிகப்பெரியது. மின்சக்திக்காக மாத மாதம் டொலரைச் செலவிடும் 'சிந்தனை வரட்சியுடைய நாடாகவே' இலங்கை இன்றளவும் இருந்து வருகின்றது. இதன் விளைவாகவே, தெற்காசியாவில் அதிகளவான மின்கட்டணத்தை வசூலிக்கும் நாடுகளில் ஒன்றாகவும் இலங்கை காணப்படுகின்றது. அத்துடன், உலகின் எந்தப் பகுதியில் பதற்றம் ஏற்பட்டாலும் அதன் பொருளாதாரத் தாக்கத்தில் இலங்கை அகப்படுகின்றமைக்கும் இதுவேதான் காரணம். இந்த நிலைமை மாறவேண்டுமென்றால், புதைபடிம எரிபொருள்களில் தங்கியிருக்காமல் சூரிய மின்சக்தி, காற்றாலை போன்ற புதுப்பிக்கத்தக்க மின்சக்தி சார்ந்த திட்டங்களுக்கு நாங்கள் மிக விரைவாக முன்னேறிச் செல்லவேண்டும்.

உலகிலுள்ள பல நாடுகள் இன்று புதுப்பிக்கத்தக்க மின்னுற்பத்திக்கு மாறியுள்ளன. அள்ள அள்ளக் குறையாத கச்சா எண்ணெய் நிறைந்திருக்கும் சவூதி, கட்டார், ஓமான் போன்ற நாடுகள்கூட புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திட்டத்தை அமுலாக்கம் செய்யத் தொடங்கியுள்ளன. மத்திய கிழக்கு நாடுகள்கூட சுயநுகர்வுக்கு புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை நாடுகின்ற நிலையில், இலங்கையோ இன்னமும் திரவ எரிபொருள்களையும், நீர்மின் உற்பத்தியையும் மட்டுமே தனது மின் தேவைக்கான பிரதான மூலக்கட்டமைப்புகளாகக் கொண்டுள்ளமை அபத்தமானது. இந்தப் பிறழ்வான சிந்தனைதான் 'தெற்காசியாவில் அதிக மின்கட்டணத்தை வசூலிக்கும் நாடாக' இலங்கை மாறக் காரணம்.

புதுப்பிக்கத்தக்க மின்சக்தி என்பது என்று உலகளாவிய பொதுப்பிரச்சினை. பருவநிலை மாற்றம், புவியின் வெப்பக்குறைப்பு, அதிகரித்து வரும் மின்சார நுகர்வு எனப் பல்வேறுபட்ட பெரும் பிரச்சினைகளுக்கான தீர்வாகப் புதுப்பிக்கத்தக்க மின்சக்தியே காணப்படுகின்றது. எனவே, ஜனாதிபதி அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், வெறுமனே வாய்ப்பேச்சுடனும் வெற்று வாக்குறுதிகளுடனும் நின்றுவிடாது தன் வார்த்தைக்கும் வாக்குறுதிகளுக்கும் செயல் வடிவம் கொடுக்க முன்வரவேண்டும். கடந்த அரசாங்கங்கள் புதுப்பிக்கத்தக்க மின்சக்தியை வெறும் கொள்கையளவில் கொண்டிருக்காமல் அதற்குச் செயல்வடிவம் கொடுத்திருந்தால், ஈரானில் இடம்பெறும் மோதலால் இலங்கை இன்று இவ்வளவுதூரம் பாதிக்கப்பட்டிருக்காது. சுழற்சிமுறை விலையேற்றம் நாட்டைச் சின்னாபின்னமாக்கியிருக்காது.


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com




### பொய்யாமொழி

**பிறன்பொருளாள் பெட்டொழுகும் பேதைமை ஞாலத்து
அறம்பொருள் கண்டார்கண் இல்**

**பொருள்:** பிறனுடைய உரிமையாகிய மனைவியை விரும்பி நடக்கும் அறியாமை, உலகத்தில் அறமும் பொருளும் ஆராய்ந்து கண்டவரிடம் இல்லை.





ஒரு மாத காலத்துக்குள்

## கல்விச் சீரமைப்புக் கொள்கை கட்டமைப்பை நிறைவு செய்க

ஜனாதிபதி அறிவுறுத்து!

கொழும்பு, ஜூன் 13

**உத்தேச கல்விச் சீர்திருத்தக் கொள்கைக் கட்டமைப்பு உருவாக்கப் பணிகளை ஒரு மாத காலத்திற்குள் நிறைவு செய்யுமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.**

தேசிய கல்வி ஆணைக்குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட கல்விக் கொள்கை கருத்துப் பத்திரம் தொடர்பான கலந்துரையாடல் கடந்த புதன்கிழமை ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

முன்பள்ளி, பொதுக்கல்வி, உயர் கல்வி, தொழிற்கல்வி மற்றும் டிஜிற்றல் கல்வி உள்ளிட்ட அடிப்படைகளின் கீழ் இச்சீர்திருத்தங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. இதுவரை நடைமுறைப்படுத்தப்பட்ட கல்விச் சீர்திருத்தங்களை மீளாய்வு செய்து, தற்போதுள்ள கல்விச் செயல்முறைக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் புதிய கட்டமைப்பு தயாரிக்கப்பட வேண்டும் என ஜனாதிபதி வலியுறுத்தினார்.

தனியார் கல்வி மற்றும் பல்கலைக்கழகக் கல்வியை ஒழுங்குபடுத்துவதன் அவசியம் குறித்தும், புதிய சமூகத்திற்குப் பொருத்தமான பிரஜையை உருவாக்கும் நோக்கில் சவால்களை மீளாய்வு செய்வது குறித்தும் இதன்போது ஆராயப்பட்டது. இந்தக்கலந்துரையாடலில் பிரதமர் கலாநிதி ஹரினி அமரசூரிய உட்பட அமைச்சின் செயலாளர்கள் மற்றும் தேசிய கல்வி ஆணைக் குழுவின் உறுப்பினர்கள் பலர் கலந்துகொண்டனர். (எ-இ)

### சீனா சென்ற இலங்கைக் குழு திரும்பியது

சீனாவில் நடைபெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான விசேட செயலமர்வில் பங்கேற்ற இலங்கைக் குழுவினர் கடந்த 5ஆம் திகதி நாடு திரும்பினர். வெகுசன ஊடகப் பிரதி அமைச்சர் கலாநிதி கௌஷல்யா ஆரியரத்ன தலைமையிலான இந்தக் குழுவினர், சீனாவின் ஆளுகைக் கட்டமைப்பு, தொழில்நுட்பம் மற்றும் ஸ்மார்ட் உட்கட்டமைப்பு நிறுவனங்களைப் பார்வையிட்டனர். இருதரப்பு நாடாளுமன்ற இராஜதந்திர உறவுகளையும் அறிவுப்பகிர்வையும் வலுப்படுத்தும் நோக்கில் கடந்த மே மாதம் 26 திகதி முதல் ஜூன் மாதம் 4 ஆம் திகதி வரை இப்பயணம் அமைந்திருந்தது. (எ-இ)

### கடந்த இரு ஆண்டுகளில் 1,093 பேர் நீரில் மூழ்கிப்பலி

கொழும்பு, ஜூன் 13

இலங்கையில் 2026ஆம் ஆண்டில் இதுவரையிலான காலப்பகுதியில் மாத்திரம் நீரில் மூழ்கி 122 உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் எப்.யு. வூட்லர் தெரிவித்துள்ளார். இவர்களில் 113 ஆண்களும் 09 பெண்களும் அடங்குவர்.

2024ஆம் ஆண்டில் 595 பேரும், 2025ஆம் ஆண்டில் 376 பேரும் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதுடன், கடந்த மூன்று வருடங்களில் இந்த எண்ணிக்கை 1,093 ஆக உயர்ந்துள்ளது. இவ்வாறு உயிரிழந்தவர்களில் பெரும்பாலானோர் இளைஞர்கள் எனத் தெரியவந்துள்ளது. விடுமுறை நாள்களிலும், குறிப்பாக வரவிருக்கும் பொசன் பண்டிகைக் காலத்திலும் நீர்நிலைகளுக்கு அருகில் செல்லும் பிள்ளைகள் மற்றும் இளைஞர்கள் குறித்துப் பெற்றோர் மிகுந்த அவதானத்துடன் செயற்படவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. (எ-இ)



### கடற்பரப்புக்களின் காற்று கடும் வேகம்

கொழும்பு, ஜூன் 13

காங்கேசன்துறையிலிருந்து மன்னார் ஊடாக கற்பிட்டி வரையான கடற்பரப்புகளுக்குப் பலத்த காற்று மற்றும் கொந்தளிப்பான கடல் நிலை குறித்த 'சிவப்பு' எச்சரிக்கையை வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ளது. நேற்று வெளியிடப்பட்ட இந்த எச்சரிக்கை இன்று முற்பகல் 10.30 மணி வரை நடைமுறையில் இருக்கும். இக்கடற்பரப்புகளில் காற்று மணிக்கு (60-70) கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என்பதால், மீனவர்கள் மற்றும் கடற்படையினர் மறுஅறிவித்தல் வரை கடலுக்குச் செல்லவேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (எ-இ)

நாளை

ஞாயிற்றுக்கிழமை- வைகாசி 31

14.06.2026

சுபநேரம் : 08.53 - 10.23

ராகுகாலம் : 04.23 - 05.53


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இந்திய இழுவைப் படகுகளால் கடல் வளத்துக்குப் பேராபத்து!

## கடற்றொழிலாளர்களின் இணையம் எச்சரிக்கை

**மன்னார், ஜூன் 13**

**இலங்கைக் கடற்பரப்புக்குள், இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறலைத் தடுக்காது விடில், இலங்கையின் கடல் வளம் பேராபத்தைச் சந்திக்க நேரிடும் என்று வடமாகாண கடற்றொழிலாளர்களின் இணையம் எச்சரித்துள்ளது.**

இதுதொடர்பில் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள அவசர கடிதம் தொடர்பில் தெளிவுபடுத்தும் ஊடக சந்திப்பில், இணையத்தின் செயலாளர் என்.எம். ஆலம் தெரிவித்துள்ளதாவது- இலங்கைக் கடற்பரப்புக்குள் தமிழ் நாட்டின் இழுவைப்படகுகள் எதிர்வரும் 15ஆம் திகதி தொடக்கம் மீண்டும் அத்துமீற ஆரம்பிக்கும். இந்த மீன்பிடி முறையால், இலங்கையில் கடல் உணவு இருப்புகள் குறைவதுடன், வடக்கு மற்றும் வடமேற்குக் கடலோரப் பகுதிகளில் ஆயிரக்கணக்கான மீனவர்களின் வாழ்வாதாரமும் பாதிக்கப்படும்.

எனவே இந்தச் சட்டவிரோத ஊடுருவலைத் தடுத்து, கடல் வளங்களைப் பாதுகாக்க நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். இந்த அழிவுகரமான மீன்பிடி முறையால், கடலடித்தளங்களும், கடல் வாழ்விடங்களும் சேதமடைந்து, மீன்பிடித் தொழிலின் நிலைத்தன்மை சீர்குலையும். அத்துடன் உலகச் சந்தைகளுக்குத் தரமான கடல் உணவு வழங்கும் நாட்டின் திறனையும் நேரடியாகப் பாதிக்கும். அதே நேரத்தில் இலங்கை கடல் உணவு ஏற்றுமதியாளர்கள் தற்போதுள்ள அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச சந்தைகளில் அதிகரித்து வரும் அழுத்தங்களையும் எதிர்கொள்ள நேரிடும்.

எனவே இலங்கையின் கடல் சூழலின் நீண்ட காலப் பாதுகாப்புக் கருதி, உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும்- என்றார். (க-56)

# வீதி நாடகப்போட்டி

மன்னார், ஜூன் 13

2026ஆம் ஆண்டுக்கான பதிவுசெய்யப்பட்ட மன்னார் மாவட்ட கலை மன்றங்களுக்கிடையிலான வீதி நாடகப்போட்டியில் மன்னார் பிரதேச செயலகப் பிரிவைச் சார்ந்த 'கலையருவி கலாமன்றம்' அணியினர் முதல் இடத்தைப் பெற்றுள்ளனர். வடக்கு மாகாண பண்பாட்டு அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் ஓர் அங்கமாக வீதி நாடகப்போட்டி வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் அலகின் அனுசரணையில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மன்னார் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது.

இந்தப் போட்டியில் மன்னார் பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த 'கலையருவி கலாமன்றம்' அணியினர் முதலாமிடத்தையும், மாந்தை பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த 'மாந்தை மேற்கு கலை கலாசார மன்றம்' அணியினர் இரண்டாமிடத்தையும், மடு பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த 'கலைமகள் கலாமன்றம்' அணியினர் மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டனர். நிகழ்வில் மன்னார் மாவட்டச் செயலாளர், மேலதிக மாவட்டச் செயலாளர், உதவி மாவட்டச் செயலாளர், பல அலுவலகர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்த வருடம் இளைஞர்கள் மட்டுமல்ல ஐம்பது வயதுக்கு மேற்பட்ட கலைஞர்களும் இப்போட்டியில் கலந்துகொண்டதுடன் போட்டியில் முதல் இடத்தைப் பெற்ற 'கலையருவி கலாமன்ற' அணியில் கூடுதலாக வயது வந்தவர்களே அதிகமாகக் காணப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (எ-41-60)





# தம்புள்ள அணியில் மகாஜன மைந்தன்




யாழ்ப்பாணம், ஜூன் 13


2026ஆம் ஆண்டுக்கான 19 வயதுக்குட்பட்டோருக்கான சுப்பர் மாகாண அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் தொடருக்காக, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மாணவனான உதயகுமார் தரணிகன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

விளையாட்டுத்துறையில் மகாஜனக் கல்லூரி மாணவர்கள் தொடர்ந்து பல சாதனைகளை நிலைநாட்டிவரும் நிலையில் உதயகுமார் தரணிகன் சுப்பர் மாகாண அணிகளுக்கு இடையிலான கிரிக்கெட் தொடருக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். (க)



வரலாற்றுச் சிறப்புமிக்க இணுவில் கந்தசுவாமி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவுக்கான பந்தல்கால் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நாட்டப்பட்டது. ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் 20ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.30 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 25 தினங்கள் இடம்பெறவுள்ளது. (எ-41-66)





வரலாற்றுச் சிறப்புமிக்க சுழிபுரம் பறளாய் ஈஸ்வர விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. (எ-41-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருப்பெயர்ச்சி பலன்கள் 2026



ஆண்டுக்கு ஒருமுறை பெயர்ச்சி அடையக்கூடிய குரு பகவான் இந்தப் பராபவ வருடத்தில், வாக்கியப் பஞ்சாங் கத்தின்படி 26.05.2026 அன்று பகல் 11 மணிக்கு மிது னம் ராசியில் இருந்து தனது உச்ச ராசியான கடகத்துக்குப் பெயர்ச்சியாகின்றார். திருக்கணித பஞ்சாங்கத்தின் படி ஜூன் 2 ஆம் திகதி பெயர்ச்சி நடக்கின்றது என்று ஜோதிடர்கள் தெரிவிக் கின்றனர். குருவின் இந்த நகர்வால் அதிர்ஷ்டமான மற்றும் கவ னமுடன் இருக்கவேண்டிய ராசியினர் யார்?, அவர்களுக்கான ஒருவருட பலன்கள் என்ன என்பதை இங்கு பார்ப்போம்.




**உளிகளைக் கண்டு பயந்தால் சிலையாக முடியாது, வலிகளைக் கண்டு பயந்தால் வாழ்க்கையை வாழமுடியாது என்ற வரிக ளுக்கு ஏற்ப வலிகளை எதிர்கொண்டு வாழும் மீன ராசிக்காரர்களே!**

உங்களது ராசிநாதனான குருபகவான், ஜூன் 2 முதல் உங்கள் ராசிக்கு 5ஆம் இடத்தில் வந்து அமர்ந்து பலன் தரப்போகிறார். இதுவரை 4இல் அமர்ந்து, பல்வேறு பிரச்சினைகளையும், மன உளைச்சலையும் கொடுத்துவந்த குருபகவான் இனி பல்வேறு யோகங்களை அள்ளித் தரப்போகிறார். மனதுக்குள் இருந்துவந்த குழப்பங்களுக் கெல்லாம் இனி தீர்வு கிடைக்கும். கணவன்- மனைவிக்குள் எதற்கெடுத்தாலும் சண்டை சச்சரவுகள் என்றிருந்த நிலை மாறும். தாம்பத்யம் இனிக்கும். மகளுக்கு நல்ல இடத்தில் வரன் அமையும். கல்யாணத்தை வெகு விமர்சையாக நடத்திமுடிப்பீர்கள். பணப்புழக் கம் தாராளமாக இருக்கும். அடகிலிருந்த வீட்டுப் பத்திரங்களை மீட்டெடுப்பீர்கள்.

வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். பொருளாதார நிலையில் முன்னேற்றம் உண்டு. சொந்த ஊரில் உங்களின் செல்வாக்குக்கூடும். சொத்துப் பிரச்சி னையில் உங்களுக்குச் சாதகமான தீர்ப்பு கிடைக் கும். உங்களின் அனுகுமுறையை மற்றவர்களின் இரசனைக்கேற்ப மாற்றி அமைத்துக்கொள்வீர்கள். சொந்த பந்தங்களுக்கு மத்தியில் உங்களின் முன் னேற்றம் அதிகரிக்கும். குலதெய்வம் கோயிலுக்குச் செய்யவேண்டிய நேர்த் திக் கடனை இப்போது நிறைவேற்றுவீர்கள்.

**குருபகவானின் பார்வை பலன்கள்:** குருபகவான் உங்கள் ராசி யைப் பார்ப்பதால், சோர்ந்திருந்த நீங்கள் இனி புது , உத்வேகத்துடன் செயற்படுவீர்கள். நாடாளுபவர் கள், தொழிலதிபர்களின் நட்பு கிடைக்கும். புதிய பொறுப்புகள், பதவிகள் தேடிவரும்.

**உங்களின் அனுகு முறையை மற்றவர்களின் ரசனைக்கேற்ப மாற்றி அமைத்துக் கொள்வீர்கள். உங்களின் முன்னேற்றம் அதிகரிக்கும். குடும்பத்தில் சந்தோம் பிறக்கும்.**

குருபகவான் உங்கள் ராசிக்கு 9ஆம் இடத்தைப் பார்ப்பதால், வறண்டு கிடந்த பணப்பை, இனி நிரம் பும். சேமிக்கும் அளவுக்குப் பொருள் வரவு உண்டு. அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் உதவுவார்கள். உடன் பிறந்தவர்களுடன் இணக்கமான போக்கைக் கடைப்பிடிக்கவும்.

குரு பகவான் உங்களின் இலாப ஸ்தானத்தைப் பார்ப்பதால், அதிரடி முன்னேற்றம், திளர்ப்பணவரவு எல்லாம் உண்டு. மனைவிக்கு விலையுயர்ந்த தங்க ஆபரணம் வாங்கிக்கொடுப்பீர்கள். மூத்த சகோதரர், சகோதரிகள் பாசமழை பொழிவார்கள்.

வியாபாரத்தில் புது முதலீடுகள் செய்வீர்கள். இழுபறியான வழக்குகளில் சாதகமான நிலை காணப்படும்.

கேதுவின் நட்சத்திரத்தில் 31.10.26 முதல் 25.01.27 வரை குருபகவான் செல்வதால் பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வழக்குகளில் வெற்றியுண்டு. திளர்ப்பணவரவு உண்டு. எனினும் சுபச்செலவுகளும் அதிகரிக்கும். கணினி, உணவு, இரும்பு, கமிஷன் வகைகளால் ஆதாயம் அடைவீர்கள். கூட்டுத்தொழி லில் பங்குதாரர்கள் ஆதரவாக இருப் பார்கள்.

உத்தியோகத்தில் மேலதிகாரியுடன் இருந்து வந்த பனிப்போர் மறையும். அவருக்கு ஆலோசனை வழங்கும் அள வுக்கு நெருக்கமாவீர்கள். நீண்ட நாளாக எதிர்பார்த்த பதவி உயர்வு தேடிவரும். வேலைச்சுமை குறையும். சக ஊழியர்கள், இனி நட்புறவாடுவார் கள். யாரையும் புண்படுத்தும்நோக்கில் பேசவோ, செயற்படவோ வேண்டாம். யாரைப் பற்றியும் தலை மையிடத்தில் புகார் கூறவேண்டாம். கணினித்துறை யினருக்கு அதிக சம்பளத்துடன் வெளிநாட்டில் வேலை கிடைக்கும். சிலர் அங்கு செட்டிலாகும் வாய்ப்பு உண்டு. கலைஞர்களுக்கு, பழைய நிறுவ னத்திலிருந்து வாய்ப்புகள் தேடிவரும். மூத்த கலை ஞர்களின் ஆலோசனையும், ஆதரவும் கிடைக்கும். இந்தக் குருப்பெயர்ச்சி திட்டமிட்டு செயற்பட்டு முன் னேறும் காலமாக அமையும்.


## வடக்கில் 42 களஞ்சியசாலைகளில் 22,642,568 மெ.தொன் நெல் தேக்கம்

கொழும்பு, ஜூன் 13

வடக்கு மாகாணத்தில் மட்டும் 2025 சிறுபோக நெல் 5729.072 மெற்றிக்தொன் 10 களஞ்சியசாலைகளிலும், 2025/26 பெரும் போக நெல் 16913.496 மெற்றிக்தொன் 32 களஞ்சியசாலை களிலும் தேங்கிக்கிடக்கின்றது என்று நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது- ஒரு இலட்சத்து 85 ஆயிரம் மெற்றிக்தொன் அரிசியை கடந்த 3 பருவகாலங்களில் தேக்கிவைத்து தரமிழக்கச் செய்த நாம், மறு புறம் கையிருப்பிலுள்ள அமெரிக்க டொலரைக் கொடுத்து பொன்னி, பால் பொன்னி அரிசியை இறக்குமதி செய்கின்றோம். அதேபோன்று வடக்கிலும் களஞ்சியசாலைகளில் நெல் தேக்க மடைந்து தரமிழக்கின்றது. இன்னும் 3 மாதங்களுக்குள் களஞ் சியசாலைகளை வெறுமையாக்காது விட்டால், அடுத்துவரும் நெல் விளைச்சலை சந்தைப்படுத்தமுடியாது. இவ்வாறான உள்நாட்டு உற்பத்திகளை முறைப்படுத்துவதில் பலவீனப்படும் நாம், மறுபுறம் ஏற்றுமதியாளர்களை இறுக்கி, நாட்டின் அந் நியச்செலாவணிக் கையிருப்பைத் தக்கவைக்கும் வழிகளைக் காண்கிறோம்-என்றார். (க-246)

## வடமராட்சியில் தீயணைப்புப்பிரிவு; துறைசார்ந்த அதிகாரிகள் ஆராய்வு!



யாழ்ப்பாணம், ஜூன் 13

வடமராட்சிப் பிராந்தியத்தில் ஒருங்கிணைந்த தீயணைப்புப் பிரிவை உருவாக்குவது தொடர் பில், பருத்தித்துறை நகரசபை யில் முதற்கட்ட ஆலோசனைக் கூட்டம் நேற்றுமுன்தினம் இடம் பெற்றது. பருத்தித்துறை நகர சபைத் தவிசாளர் வின்சென் டீ போல் டக்ளஸ் போலால், கடந்த மாதம் முன்வைக்கப்பட்ட தீர்மா னம் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. குறித்த தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பான முதற்கட்ட ஆலோசனைக் கூட்டத்தில், நகரசபையினர் மற்றும் பருத்தித்துறை, கரவெட்டி, மருதங்கேணி பிர தேச செயலக பிரதிநிதிகள், பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி, பொதுச்சுகாதார உத்தியோகத்தர் கள் ஆகியோர் பங்கேற்றனர். வடமராட்சிப் பிரதேசத்தில் தீ விபத்துச் சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம் பெற்றுவரும் நிலையில், உள்ளூராட்சிமன்றங்களின் நீர்த்தாங்கி வாகனங்கள் மூலமே, அவற்றைக் கட்டுப் படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகின்றது. யாழ். மாநகரசபைத் தீயணைப்புப் பிரிவினரது உதவியைப் பெறுவதில் காலதாமதம் உள்ளிட்ட நடைமுறைச் சிக் கல்கள் காணப்படுகின்றன.

வடமராட்சிப் பிராந்தியத்தை மையமாக இணைக்கும் வகையில் கரவெட்டிப் பிரதேசசபை எல்லைக்குள் அதனை அமைப்பது பொருத்தமாக இருக்கும். வட மராட்சியில் உள்ள 4 சபைகளும் இணைந்து மத்திய அரசின் ஒத்துழைப்புடன் தான் இந்தத் திட்டத்தைச் செயற்படுத்தமுடியும் என்று நகரசபைச் செயலாளர் திட்டம் தொடர்பில் விளக்கினார். தொடர்ந்து பங்கேற் றிருந்தவர்களின் கருத்துகள் கேட்கப்பட்டன. வடமராட் சியில் தீயணைப்புப் பிரிவை உருவாக்கும் முயற்சியை மக்கள் பெரிதும் வரவேற்பர் என்று பருத்தித்துறை நகரசபைத் தவிசாளர் தெரிவித்தார். (க-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாலேயைச் சந்திப்பதற்கு ஷானியிடம் கோரிக்கை



கொழும்பு, ஜூன் 13

கொழும்பு தேசிய மருத்துவமனையில் சிகிச்சைபெறும் அரச புலனாய்வுச் சேவையின் முன்னாள் பணிப்பாளரான சுரேஷ் சாலேவை தினமும் சந்திக்க அனுமதி வழங்கக் கோரி அவரது மனைவி மற்றும் சட்டத்தரணி ஆகியோர் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் ஷானி அபேசேகரவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். இதற்காக அவர்கள் குற்றப்புலனாய்வுத்திணைக்களத்தின் பணிப்பாளருக்கு இரண்டு தனித்தனி கடிதங்களை அனுப்பியுள்ளனர்.

2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தினத்தாக்குதல் சம்பவம் தொடர்பான விசாரணைகளின் அடிப்படையில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள அரச புலனாய்வுச் சேவையின் முன்னாள் பணிப்பாளரும் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரலுமான சுரேஷ் சாலே, தற்போது குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் காவலிலிருந்து தொடர்ந்து கொழும்பு தேசிய மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். (எ-இ)

## THE ROYAL COLLEGE OF JAFFNA

தனியார் கல்வி நிறுவனம் - சங்கானை

A/L 2028 BATCH கலைப்பிரிவு ஆரம்பமாகவுள்ளது. பதிவுகளை மேற்கொள்ளவும்.

தமிழ் - கரன், வரலாறு - லக்ஷன், மீடியா - சங்கீர்த்தனா. பிரான்பற்று வீதி, சங்கானை.

தொடர்பு: 077 675 1649

## சுத்திகரிப்பாளர் தேவை

யாழ்நகரில் இயங்கிவரும் ஸ்தாபனங்களிற்கு சுத்திகரிப்பு சேவையை மேற்கொள்வதற்கு சுத்திகரிப்பாளர்கள் தேவை.

வயதெல்லை: 21 -55

ஆண், பெண் இருபாலாரும்

077 903 7288

# டவர் தமிழ் நாடகப் பாடசாலை டிப்ளோமா பட்டமளிப்பு விழா

டவர் நாடக அரங்கப் பாடசாலை மூலம் நடைபெற்று வருகின்ற தமிழ்மொழி மூலமான இரண்டுவருட முழுநேர நாடகமும் அரங்கக் கலைகளுக்குமான உயர் டிப்ளோமா பாடநெறியை பூர்த்திசெய்த 2023/24 கல்வியாண்டின் 49 மாணவர்களுக்கு டிப்ளோமா சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு இன்று காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மத்திய நிலையத்தின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது. கடற்றொழில் நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன் மற்றும் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் உட்பட டவர் நாடகப் பாடசாலை ஆலோசனைக்குழு உறுப்பினர்கள், நாடக பாடநெறி விரிவுரையாளர்கள், டிப்ளோமாதாரர்கள் எனப்பலர் பங்கேற்கவுள்ளனர். (ச)

## உடனடி வேலைவாய்ப்பு

(பகுதி, முழுநேரம்)

இலங்கையில் மிகப் பிரபல்யமான காப்புறுதி நிறுவனத்தின் யாழ்ப்பாணம் கிளைக் காரியாலயத்தில் விற்பனைத்துறை (Sales) மற்றும் முகாமைத்துவத்தில் (Management) வரையறுக்கப்பட்ட வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

பின்வரும் தகைமை உடையோர் விண்ணப்பிக்கலாம்

கல்வித் தகுதி - க.பொ.த (சா/த), (உ/த) சித்தி

மேலதிக கல்வித் தகைமைகள் விரும்பத்தக்கது

* அரசதுறையில் தற்போது உத்தியோகம் செய்வோர்
* ஓய்வுபெற்றோர் (தேகாரோக்கியம் அவசியம்)
* பல்கலைக்கழக மாணவர்கள், பட்டதாரிகள், வேலை தேடிக்கொண்டிருப்போர்.

விருப்பமுடையோர் உங்களது சுயவிபரக்கோவையை 077 934 8512 எனும் whatsapp இலக்கத்திற்கு இம் மாதம் 20.06.2026 இற்கு முன்னர் அனுப்பிவைக்கவும்.

(cs.61634 (N-1)

## Consulate General of India, Jaffna

**Advt. No. JAF/ADM/578/01/2026**

## வேலைவாய்ப்பு அறிவித்தல்

யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரகம் (Consulate General of India, Jaffna) "சாரதி / வாகன ஓட்டுநர் (Chauffeur/Driver)" பதவிக்கான **ஒரு (01)** வெற்றிடத்தை நிரப்புவதற்குத் தகுதியான விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்களை வரவேற்கிறது.

**விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும்:**

* இலங்கைப் பிரஜையாக இருக்க வேண்டும்.
* வயது 35 ஆண்டுகளுக்கு உட்பட்டவராக இருக்க வேண்டும்.
* குறைந்தபட்சம் கல்விப் பொதுத் தராதர சாதாரண தர (G.C.E. O/L) தகுதியைக் கொண்டிருக்க வேண்டும்.
* செல்லுபடியாகும் கனரக வாகன ஓட்டுநர் உரிமம் பெற்றிருக்க வேண்டும்.
* குறைந்தது 03 ஆண்டுகள் தொடர்புடைய பணியனுபவம் கொண்டிருக்க வேண்டும்.

இவ்வெற்றிடம் தொடர்பான மேலதிக விபரங்களும் விண்ணப்பப் படிவமும் இந்தியத் துணைத் தூதரகத்தின் இணையத்தளமான https://www.cgijaffna.gov.in இல் கிடைக்கப்பெறும்.

ஆர்வமுள்ள விண்ணப்பதாரர்கள் விண்ணப்பப் படிவத்தை பதிவிறக்கம் செய்து முழுமையாக பூர்த்தி செய்து, 26 ஜூன் 2026 ஆம் திகதிக்குள் அஞ்சல் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ கீழ்க்கண்ட முகவரிக்கு சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**தலைமைச் செயலாளர்** (Head of Chancery)
**இந்தியத் துணைத் தூதரகம்**
**14, மருதடி ஒழுங்கை,**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**

(cr.47871) (N-1)

## மரண அறிவித்தல்



தோற்றம் 30 . 01 . 1948

மறைவு 11 . 06 . 2026

### திருமதி அரசரட்ணம் விமலேஸ்வரி

சாவகச்சேரி டச்சு வீதியை பிறப்பிடமாகவும் மற்றும் கொழும்பு மருதானையை வசிப்பிடமாகவும் கொண்ட அரசரட்ணம் விமலேஸ்வரி அவர்கள் 11.06.2026 வியாழக்கிழமை சிவபதமடைந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா - தையல் நாயகி (அழகம்மா) தம்பதியரின் பாசமிகு மூத்தமகளும், காலஞ்சென்றவர்களான கனகரத்தினம் - ரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகளும், கனகரத்தினம் அரசரட்ணம் அவர்களின் அன்பு மனைவியும், ஞானேஸ்வரி (கனடா), யோகேஸ்வரி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு சகோதரியும், சிவலிங்கம், விக்னேஷ்வரன், மல்லிகாதேவி ஆகியோரின் மைத்துனியும், வள்ளுவன், (கனடா), Dr.இளங்கோவன், பாரதி, சீதா (கனடா), புகழேந்தி (தென் ஆபிரிக்கா) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஆரணி, நிரோசினி, றொசானி, தேவமனோகரன், ஷாம் ஆகியோரின் அன்பு மாமியாரும், யுதிஸ்ரன், ஆர்த்தி, லைமுவல், கெனா, அத்வித்தியா, தீரன், ராகுல், கீர்த்தன், சபீஷன், றஜீஷன், விபூஷன், டிலக்ஷன், டில்க்ஷி ஆகியோரின் பாசமிகு பாட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 14.06.2026 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 - மாலை 6.00 மணி முதல் பொரலலை ஜெயரத்தின மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் 15.06.2026 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 02.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மாலை 4.00 மணிக்கு பொரல்லை பொது இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(cs.47677) N

தகவல் : குடும்பத்தினர் - பாரதி - 076 722 4807

## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 09 . 11 . 1939

மறைவு 15 . 06 . 2023

இணுவிலைப் பிறப்பிடமாகவும், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட

### அமரர் ஆறுப்பிள்ளை நடராசா

(இராமகிருஷ்ணன் - ஓய்வுபெற்ற அதிபர்)

**திதி: 13.06.2026**

ஒளி தந்த சுடர் விளக்கே
காற்றோடு கலைந்ததுவே
புயல் கொண்டு போனதுவே
ஆயிரம் உறவு இருந்தென்ன
உங்களைப் போல் ஒரு உறவு வருமா?
கண்ணில் எம் உயிர் உள்ளவரை

பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

[illegible] வீதி,
[illegible] குளம், வவுனியா.

(cs. 31963) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சாலே விவகாரத்தைப் பயன்படுத்தி இனவாதத்தைத் தூண்டச்சதி!

ரிஷாத் பதியுதீன் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 13

அரச புலனாய்வுப்பிரிவின் முன்னாள் பணிப்பாளர் சுரேஷ் சாலே விவகாரத்தைப் பயன்படுத்தி, விமல் வீரவன்ஸ மற்றும் உதய கம்மன்பில உள்ளிட்ட இனவாத சக்திகள் சிங்கள மக்கள் மத்தியில் மீண்டும் இனவாதத்தைத் தூண்டி விட முயற்சிக்கின்றனர் என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் ரிஷாத் பதியுதீன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற விவாதத்தில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலால் பாதிக்கப்பட்ட கத்தோலிக்க மக்களும், பழிசுமத்தப்பட்ட முஸ்லிம் சமூகமும் உண்மையான குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்றே எதிர்பார்க்கின்றனர். இவ்வாறான சூழலில், நீதிமன்ற விசாரணைகள் மூலம் புதியஉண்மைகள் வெளிவரும்போது, கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக சுரேஷ் சாலேவுக்காகச் சிலர் சத்தியாக்கிரகம் இருப்பது துரதிர்ஷ்டவசமானது.

சுரேஷ் சாலே உண்ணாவிரத அச்சுறுத்தல்களை விடுத்து விசாரணைகளைத் திசை திருப்பாமல், நீதிமன்றம் ஊடாகத் தனது நிரபராதித்தன்மையை நிரூபிக்க வேண்டும். கடந்த காலத்தில் முஸ்லிம் முக்கியஸ்தர்கள் பலர் அநியாயமாகக் கைது செய்யப்பட்டபோது குரல் கொடுக்காத இனவாதச் சக்திகள், இப்போது தாக்குதலின் உண்மை வெளிவருவதைத் தடுக்கவே ஒன்றிணைந்துள்ளனர். எனவே, அரசாங்கம் இவர்களின் அச்சுறுத்தல்களுக்கு அடிபணியாது விசாரணைகளை விரைவுபடுத்த வேண்டும் - என்றார். (எ-இ)

# சைக்கிள் ஓட்டப்போட்டி

யாழ்ப்பாணம், ஜூன் 13

நல்லூர் அரசடி ஜனசக்தி சனசமூக நிலையத்தின் 78ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு யாழ். மாவட்ட ரீதியிலான 50 மைல் சைக்கிள் ஓட்டப்போட்டி நாளை நடைபெறவுள்ளது.

குறித்த போட்டியானது காலை 6.30 மணிக்கு ஆரம்பமாகும். எனவே, போட்டியில் பங்கெடுக்க விரும்பும் வீரர்கள் நல்லூர் அரசடி ஜனசக்தி சனசமூக நிலையத்தினருடன் தொடர்பு கொண்டு தமது பங்கேற்பை உறுதிப்படுத்த முடியும். (ம-40)

# ஷானியும், ரவி செனவிரத்னவும் அரசியல் செயற்பாட்டாளர்கள்

தயாசிறி ஜயசேகர குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 13

உயிர்த்த ஞாயிறுக் குண்டுத்தாக்குதல் குறித்து விசாரணை நடத்தும் ஷானி அபேசேகர மற்றும் ரவி செனவிரத்ன ஆகியோர் தேசிய மக்கள் சக்தியின் அரசியல் செயற்பாட்டாளர்கள் என ஐக்கிய மக்கள் சக்தியின் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர குற்றஞ்சாட்டியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற விவாதத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

இவர்கள் இருவரும் தாம் தேசிய மக்கள் சக்தியின் அரசியலில் ஈடுபடுவதாக உயர்நீதிமன்றில் சத்தியக்கடதாசி மூலம் அறிவித்துள்ளனர். தாக்குதல் தொடர்பாக முன்கூட்டியே போதுமான தகவல்கள் கிடைத்தும் அன்றைய பொலிஸ் அதிகாரியான ரவி செனவிரத்ன அவற்றைப் பொருட்படுத்தவில்லை. தாக்குதல் நடந்த மறுநாளே அத்தகவல்களைப் பரிசீலித்துள்ளார். இது மனிதப்படுகொலைக்கு இணையான குற்றம்.

உண்மையைக் கண்டறிவதாகக் கூறி ஆட்சிக்கு வந்த தேசிய மக்கள் சக்தி, விசாரணைகளை அரசியல் பழிவாங்கலாக மாற்றக்கூடாது. இந்த விவகாரத்தில் சுரேஷ் சாலே கைதுசெய்யப்பட்டு விசாரிக்கப்படுவதை நாம் எதிர்க்கவில்லை. ஆனால் அவ்விசாரணைகள் மனிதாபிமான முறையிலும் சட்டரீதியாகவும் அமைய வேண்டும் - என்றார். (எ-இ)


## காணி விற்பனைக்கு

இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் கோவிலுக்கு மிக அண்மையில் 1 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 076 247 6927



## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 10 . 09 . 2000

மறைவு 14 . 05 . 2026



அமரர் சிறிதரன் குஜேந்தன்

நாட்கள் பல சென்றாலும்
அகலவில்லை எங்கள் துயரம்
மனம் உங்களைத் தேடுகிறது
நினைவுகள் ரணங்களாய்க் கொல்கின்றன
குடும்பத்தின் ஒளிவிளக்காய்
அனைவருடனும் கலகலப்பாகப்பேசி
மகிழ்விக்கும் உங்கள் சிரித்தமுகம்
கண்களில் தொடர்ச்சியாகத்
தோன்றிய வண்ணம் இருக்கின்றது
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !

(CS/61616) J-1

உம் ஒழுங்கை, பூநாரி வீதி,
யாழ்ப்பாணம்.
076 244 3020

குடும்பத்தினர்


# விசேட தேவைகள் கொண்ட முப்படையினருக்கு நிவாரணம்

பயங்கரவாதச் செயல்களால் விசேட தேவையுடைய முப்படைகள் மற்றும் பொலிஸாருக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பான கலந்துரையாடல், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் அருண ஜயசேகர தலைமையில் நாடாளுமன்ற வளாகத்தில் அண்மையில் நடைபெற்றது.

அமைச்சரவைத் தீர்மானத்தின்படி, உயிரிழந்த, விசேட தேவையுடைய அல்லது உடல்நலக்குறைவால் சேவையிலிருந்து நீக்கப்பட்டவர்களை அடையாளம் காணச் சுகாதார அமைச்சின் பங்களிப்புடன் மருத்துவக் குழுவொன்றை நியமிப்பது குறித்து இங்கு ஆராயப்பட்டது. இந்தக் குழுவின் பணிகளைப் பிரதேச மட்டத்துக்குப் பரவலாக்கி, இராணுவ மருத்துவ வசதிகளைப் பயன்படுத்தித் தகுதியானவர்களுக்குத் தாமதமின்றி நிவாரணங்களை வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு இராஜாங்க அமைச்சர் அறிவுறுத்தல் வழங்கியுள்ளார். (எ-இ)


## அகில இலங்கை இளங்கோ கழகம்
## புலமை ஒலி - 2026
## சிலப்பதிகார விழா

இடம் :- பெளராணிகர் வீரகத்திப்பிள்ளை விநாயகம் அரங்கு வடிவேலர் மணி மண்டபம், துன்னாலை, கரவெட்டி.

காலம் :- 13.06.2026 சனிக்கிழமை மாலை 4.00 மணி

முன்னிலை : திரு . கணபதிப்பிள்ளை பஞ்சலிங்கம் (தொழிலதிபர், BOTSWANA)

சண்முகநாதன் சுகந்தன் அவர்களால் நிறுவப்பட்ட திருமதி இரத்தினமணி சண்முகநாதன் ஞாபகார்த்த கலைப் பணிக்கான உயர்விருது பெறுபவர் கலாபூசணம் மா. அனந்தராஜன்

பரா . றமேஸ் அவர்களால் நிறுவப்பட்ட திரு திருமதி பரராஜசிங்கம் பரமேஸ்வரி ஞாபகார்த்த சொல் வன்மைக்கான உயர்விருது பெறுபவர் தமிழருவி த.சிவகுமாரன்

**வரவேற்பு நடனம்**

ந.அக்ஷயா, மு.மாதுலா, கி.நிலாவிழி, பூ.ஓம்ரிதா, ந.சானுஜா, கி.இலக்கியா (நெறியாள்கை: செல்வி. கீர்த்தனா சந்திரபாலன்)

**மங்கல விளக்கேற்றல்**

திரு.திருமதி நித்தியானந்தன் இரத்தினரஞ்சினி தம்பதியினர் (கலைஞர் கந்தையா வடிவேலு அவர்களின் பேரனாரும் வடிவேலர் மணிமண்டபத்தின் முகாமையாளரும்) திரு.திருமதி செந்தூரன் சியாமளா தம்பதியினர் (பிரதி அதிபர், வரணி மத்திய கல்லூரி)

**கடவுள் வாழ்த்து**

செல்வி. யோகாஞ்சனா யோகராசா (ஆசிரியை, வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி )

**கழகக்கீதம்**

**வரவேற்புரை**

திரு . க . கஜந்தன்

**தலைமையுரை**

திரு. வே. உதயமோகன் (அதிபர், ஹாட்லிக் கல்லூரி )

**தொடக்கவுரை**

எழுத்தாளர், வைத்தியகலாநிதி பஞ்சகல்யாணி ஸ்ரீபன் (ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை)

**அறிமுகவுரை**

திருமதி . கிருஷ்ணலதா குலசங்கர் (அதிபர், வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி )

**நன்றியுரை**

லோ. ஜே. காருண்யா மொறாய்ஸ்
நிகழ்ச்சித் தொகுப்பு திரு. த. குருபரன்

**கவியரங்கு**

"இளங்கோவின் அடி தொட்டு..."
தலைமை : சிலம்பிசை க . வாணிமுகுந்தன்
பீடு அன்று : சி. ரஜினிகாந்
தீது அறுக : கி.லோகேஸ்வரன்
வல்வினை ஊட்டும் : சி. வினோஜிதன்
வளையாத செங்கோல் : ச . சுகர்ணன்

**எழிலுரை அரங்கு**

உரையாளர்
தமிழருவி . த . சிவகுமாரன்
பொருள் : "சித்திரச் சிலப்பதிகாரம்"

**கதாப்பிரசங்கம்**

"பாண்டியன் பாவை"
ஆற்றுபவர் : வாமதேவ சிவசதீபன்

**இலக்கிய ஆணைக்குழு**

ஆணையாளர் : கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ்
கற்போரைப் பெரிதும் கலங்க வைக்கும் மரணத்தை அணைத்துக் கொண்டவர்
தசரதனே : பேராசான் ஐ. கதிர்காமசேகரன்,
த.கருணாகரன்
கோவலனே : சொல்லின்செல்வர் இரா.செல்வவடிவேல், பரா ரமேஸ்
கர்ணனே : பேராசிரியர் ஶ்ரீ. பிரசாந்தன்
அ . வாசுதேவா

விழா சிறப்புற வாழ்த்துவோர்:
அறிவியற் கல்லூரி, ஓராம் கட்டை, பருத்தித்துறை.
தங்கராசா வைகுந்தன், தம்பசிட்டி
சண்முகநாதன் சுகந்தன்
கந்தமுருகேசனார் வீதி, உபயகதிர்காமம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அரசியல் செல்வாக்கு இருப்பினும் சட்டத்திலிருந்து தப்பிக்க முடியாது

## அமைச்சர் ஹந்துன்நெத்தி தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 13

கடந்த ஆட்சிக் காலங்களைப் போலன்றி, தற்போதைய நிர்வாகத்தில் சட்டம் அனைவருக்கும் சமமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. செல்வாக்கு அல்லது அரசியல் அதிகாரம் கொண்ட எவராக இருந்தாலும் சட்டத்தின் முன் பொறுப்புக் கூற வேண்டியது அவசியம் என்று கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சியாண்மை அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது



உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் முக்கியமான சந்தேகநபர்களில் ஒருவரான சுரேஷ் சாலே மற்றும் முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் போன்ற அதீத செல்வாக்கு உடையவர்களை ஒருபோதும் கைது செய்யமுடியாது எனப் பேசப்பட்ட போதிலும், சட்டம் தன் கடமையைச் செய்துள்ளது. கடந்த ஆட்சிக் காலங்களில் அரசியல்வாதிகள் கைது செய்யப்பட்டவுடன், போலியான உடல்நலக்குறைபாடுகளைக் காரணங்காட்டி சிறைச்சாலை மருத்துவமனைக்கு மாறி சுகபோகம் அனுபவிக்கும் 'சலுகைக் கலாசாரத்துக்கு' புதிய அரசாங்கம் முற்றுப்புள்ளி வைத்துள்ளது. நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் விமல் வீரவன்ஸ வுக்கு எதிரான நீதிமன்ற வழக்கு மீண்டும் முழுமையாக விசாரணைக்கு உட்படுத்தப்படும். தங்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை உணர்ந்துகொண்ட அரசியல்வாதிகள் சத்தமிடுவதும், அரசாங்கத்தின் மீது 'அரசியல் பழிவாங்கல்' என்ற பழியைச் சுமத்துவதும் தங்களைச் சமூகத்தின் முன்னிலையில் பாதுகாத்துக் கொள்வதற்காகவேயாகும். வீதிகளில் இறங்கிப் போராட்டம் நடத்துவது அவர்களது கடந்த காலத் தவறுகளையே அவர்களுக்கு நினைவூட்டும்- என்றார். (ச-இ)

# ஈஸ்டர் தாக்குதல் முழுப்பழியை சாலே மீது மட்டும் சுமத்தக்கூடாது

## உருகுகின்றார் சாமர சம்பத்

கொழும்பு, ஜூன் 13

உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத்தாக்குதல் சம்பவத்தின் முழுப்பழியையும் முன்னாள் புலனாய்வுத்துறைப் பிரதானி சுரேஷ் சாலே மீது மாத்திரம் சுமத்தக் கூடாது என புதிய ஜனநாயக முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற விவாதமொன்றில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது- 2017ஆம் ஆண்டிலேயே இலங்கையில் ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாத அச்சுறுத்தல் குறித்து விஜேதாச ராஜபக்ஷ சபையில் எச்சரித்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

2019 ஏப்ரல் 21 தாக்குதலுக்கு பத்து நாள்களுக்கு முன்னரே, பிரபுக்களின் மெய்பாதுகாவலர்களுக்கு இது தொடர்பான தகவல் கிடைத்தி ருந்தது.

தாக்குதலுக்கு முன்னர் கொழும்பில் சஹ்ரான் கைது செய்யப்பட்டபோது, அவரை சாய்ந்தமருது நீதிமன்றத்திற்கு அழைத்துச் சென்ற சட்டத்தரணி தற்போதைய நாடாளுமன்றத்திலும் உள்ளார். சம்பவத்துடன் தொடர்புடைய பலர் இன்னும் இருக்கின்றனர். தற்போது குற்றப்புலனாய்வுத் துறையிலுள்ள ஷானி அபேசேகர மற்றும் ரவி செனவிரத்ன ஆகியோரே அன்றைய அரசாங்கத்தில் இதுதொடர்பான பொலிஸ் விசாரணை களை முன்னெடுத்திருந்தனர்- என்றார்.

(எ-இ)


## மரண அறிவித்தல்

தோற்றம்
10 . 01 . 1932



மறைவு
12 . 06 . 2026

### பாலசிங்கம் அன்னமுத்து

காரைநகர் பயிரிக்கூடலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பாலசிங்கம் அன்னமுத்து அவர்கள் நேற்று (12.06.2026) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் - இராசம்மா தம்பதியரின் மூத்த புதல்வியும், காலஞ்சென்ற பாலசிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் - பார்வதி தம்பதியரின் மருமகளும், கந்தசாமி (முன்னாள் பணிப்பாளர், நீர்பாசனத் திணைக்களம், வடகிழக்கு மாகாணம்), நமசிவாயம், பரமேஸ்வரி, ஆறுமுகம் (ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரிய ஆலோசகர்), காலஞ்சென்ற மங்கையற்கரசி ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான மாணிக்கம், அருளம்பலம், கனகம்மா ஆகியோரின் மைத்துனியும், சிவஞானம், லோகேஸ்வரி, புவனேஸ்வரி, இராசலட்சுமி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற அன்னபாக்கியலட்சுமி மற்றும் திருப்பதி (P.S.T and Sons உரிமையாளர்), காலஞ்சென்ற ஏரம்பமூர்த்தி மற்றும் ஈஸ்வரலிங்கம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்ற மங்கையற்கரசி மற்றும் பராசக்தி, காலஞ்சென்றவர்களான இராமநாதன், கனகாம்பிகை, தில்லைநாதன் ஆகியோரின் மைத்துனியும், ராகுலன், ராகவன், விசாலினி, மயூரன், மயூரகாந் (பிரான்ஸ்), மயூரபிரகாஷ், செந்தூரன் (ஜேர்மனி), கீர்த்திகா (ஜேர்மனி), துசியந்தினி, தர்சிகா ஆகியோரின் பேர்த்தியும், மதீசனின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.06.2026) ஞாயிற்றுக்கிழமை காலை 08.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.
திருப்பதி (மருமகன்)
T.P: 077 39 23 036

(CS 319751)A

## மரண அறிவித்தல்

தோற்றம்
19 . 04 . 1980



மறைவு
06 . 06 . 2026

### குணரத்தினம் ஜெகரூபன்

(Technical officer - JEGMA Technical services L.L.C-Dubai)

மாவடி வீதி, அச்சுவேலி தெற்கை பிறப்பிடமாகவும் உடுப்பிட்டி வீதி தொண்டைமானாற்றை வசிப்பிடமாகவும் கொண்ட குணரத்தினம் ஜெகரூபன் அவர்கள் 06.06.2026 அன்று டுபாயில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குணரத்தினம் - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும், அமரர் தங்கராசா-சிவானந்தி தம்பதிகளின் அன்பு மருமகனும், கயல்விழியின் அன்புக் கணவரும், அபிசாந், ஆதிரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெகன் (Engineer- Managing Director -JEGMA Technical services L.L.L-Dubai) ஜெயாதா, ஜெஸ்மின் ஆகியோரின் சகோதரனும், ரஞ்சினி (Dubai), ஜனதன் (Teacher -Jaffna Central College), கமலகண்ணன் (Swiss), கௌரீசன் (Canada), கல்யாணி ஆகியோரின் மைத்துனரும், மரூயனா (Swiss), விஜிந்தன் (Railway Department) ஆகியோரின் அன்புச் சகோதரனும், கார்த்திகன் (Canada), கீர்த்திகன் (Canada), றுஷானி (Dubai) ஆகியோரின் சித்தப்பாவும், கபிநயா, அனந்திகா, அருள்விழி, அகல்விழி, அன்ரூ(Swiss), ஜெனி (Swiss) ஆகியோரின் மாமானாரும், சஜினி, சம்ஜிதா ஆகியோரின் பெரியப்பாவுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அன்னாரது இல்லத்தில் நாளை (14.06.2026) ஞாயிற்றுக்கிழமை மதியம் இடம்பெற்று, பூதவுடல் பிற்பகல் 1.00 மணியளவில் காட்டுப்புலம் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கெருடாவில் தெற்கு,
உடுப்பிட்டி வீதி,
தொண்டைமானாறு.

தகவல்: குடும்பத்தினர்
(0774276232/0767461066)

(CS 319689)A


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீரற்ற...

இலங்கையின் பல்வேறு பகுதிகளில் தற்போது மழையுடனான சீரற்ற கால நிலை நிலவி வருகின்றது. இந்தக் குழப்பமான காலநிலை அடுத்த சில நாள்களுக்குத் தொடரும். அத்துடன், மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுப் பகுதிகள், வடக்கு மற்றும் வடமத்திய மாகாணங்கள், அம்பாந்தோட்டை மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் மணிக்கு 40 முதல் 50 கிலோமீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும். நாட்டின் ஏனைய பகுதிகளில் மணிக்கு 30 முதல் 40 கிலோமீற்றர் வேகத்தில் ஓரளவு பலத்த காற்று வீசக்கூடும். எனவே, இந்தக் காலநிலை மாற்றங்கள் தொடர்பில் பொதுமக்கள் உரிய முன்னெச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும் - என்றுள்ளது. (அ-ம)

## கிளிநொச்சிப்...

கிளிநொச்சியைச் சேர்ந்த சொல்லிசைப் பாடகர் சங்கீத்சன் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். அவர் தொடர்பான வழக்கு நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிலையில், எதிர்வரும் 23ஆம் திகதிவரை வழக்குத் தவணையிடப்பட்டது.

இதையடுத்து, நேற்றுக் காலை பொலிஸார் இந்த விடயம் தொடர்பாக சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல் செய்தனர். பாடகர் சங்கீத்சனுக்கு எதிராக சுமத்தப்பட்ட பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழான குற்றச்சாட்டை விலக்கிக்கொள்ள சட்டமா அதிபர் தீர்மானித்துள்ளார் என்றும், சங்கீத்சனுக்கு எதிராக சாதாரண தண்டனைச் சட்டக் கோவையின் 120ஆம் பிரிவின் கீழ் அரசின் மீது வெறுப்புணர்வைத் தூண்டுதல் அல்லது அதிருப்தியை ஏற்படுத்த முயற்சித்த குற்றச்சாட்டைத் தொடர தீர்மானிக்கப்பட்டிருப்பதாகவும் பொலிஸார் அந்த மனுவில் தெரிவித்தனர். இது தொடர்பாக பொலிஸ் தரப்புக்கு சட்டமா அதிபர் திணைக்களத்தில் இருந்து அனுப்பப்பட்ட கடிதத்தை பொலிஸார் மன்றில் சமர்ப்பித்தனர். இதையடுத்து, அவரை உடனடியாக பிணையில் விடுவிக்கக்கோரி அவரது சட்டத்தரணியாகச் செயற்பட்ட கேசவன் சயந்தன் பிணை மனுவொன்றைத் தாக்கல் செய்து வாதிட்டார்.

'பொலிஸார் சங்கீத்சனுக்கு எதிரான பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழான குற்றச்சாட்டை விலக்கிக் கொள்வதால் அவரை உடனடியாக பிணையில் செல்ல அனுமதிக்க வேண்டும். இந்த விவகாரத்துக்காக சங்கீத்சனுக்கு எதிராகப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் குற்றஞ்சுமத்த முடியாது என்பது தான் ஆரம்பம் தொட்டு எங்களது நிலைப்பாடு' என்று சுட்டிக் காட்டிய சட்டத்தரணி சயந்தன் சாதாரண தண்டனைச் சட்டக் கோவையின் 120ஆவது பிரிவின் கீழான குற்றச்சாட்டு என்றால் அது தொடர்பில் பிணை வழங்க முடியும் என்பதையும் சமர்ப்பணம் செய்தார். சமர்ப்பணத்தைக் கேட்டறிந்த நீதவான், இது தொடர்பான தீர்ப்பு சற்று நேரத்துக்கு ஒத்திவைக்கப்படுவதாக அறிவித்தார்.

மீண்டும் நீதிமன்றம் கூடியவேளையில் நீதிமன்றத்துக்குச் சங்கீத்சனின் தாயார், ஆளும்தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரனுடன் பிரசன்னமானார். தாம் தமது மகனுக்காக சயந்தன் அல்லாத இன்னொரு சட்டத்தரணியை மன்றில் முன்னிலைப் படுத்துகின்றார் என்று அவர் தெரியப்படுத்தினார். தாம் பிணைமனு தொடர்பாக சமர்ப்பணம் செய்து விசாரணை முடிந்து விட்டது, நீதிமன்றம் முடிவை வழங்கும் என்று சயந்தன் தெரிவித்த நிலையில் மன்று மீண்டும் கூடியது.

இரண்டாவது தடவை வழக்கு நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்ட போது, இந்த விடயத்தில் சட்டமா அதிபர் அனுப்பியதாகக் கூறப்படும் கடிதத்தின் பிரதி தமக்குக் கிடைக்கவில்லை என்றும், அதனால் வழக்கின் மேற்படி விவகாரத்தை ஒட்டிய தீர்மானத்தை 17ஆம் திகதி புதன்கிழமை வழங்குவதாகத் தெரிவித்து நீதவான் வழக்கை ஒத்தி வைத்தார்.

ஆயினும் சட்டத்தரணிகளான அஞ்சனன், சுபாகரன் (சங்கீத்சனின் தாயார் அழைத்துவந்த சட்டத்தரணி) ஆகியோர் மேற்படி சட்டமா அதிபருடைய கடிதத்தின் நீதிமன்றத்துக்கான பிரதியை மன்றில் கிடைக்கச்செய்து, சம்பந்தப்பட்ட பொலிஸ் தரப்பினரும் மன்றில் பிரசன்னமாகச் செய்தனர். இதையடுத்து, மூன்றாவது தடவையாக வழக்கு மன்றில் அழைக்கப்பட்டது. இதைத் தொடர்ந்தே சங்கீத்சனை பிணையில் செல்வதற்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியது. (அ-ம-26)

## ஆளுநரின்...

இது தொடர்பாக நாடாளுமன்றத்தில் நேற்று அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த ஏப்ரல் மாதம் 22ஆம் திகதி யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதியாகப் பதவியேற்ற அலெக்ஸ்ராஜா, மே மாதம் 31ஆம் திகதி உடன் அமுலுக்கு வரும்வகையில் பதுளைக்கு மாற்றப்பட்டுள்ளார். இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைமையிலான தமிழ்த் தேசியப் பேரவைக் கூட்டணியின் கட்டுப்பாட்டில் உள்ள பருத்தித்துறை மற்றும் சாவகச்சேரி நகரசபைகள் மீது வடமாகாண ஆளுநரால் விசாரணைகள் ஏவப்பட்டிருந்தன. இதற்கு எதிராக பருத்தித்துறை நகரசபையால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளை விசாரித்த நீதிபதி, ஆளுநரின் விசாரணைக்கு இடைக்காலத் தடை விதித்து நடவடிக்கை எடுத்திருந்தார். அத்துடன், கிளிநொச்சியில் பணியாற்றிய வேளையிலும் ஆளுநரின் தீர்மானத்துக்கு எதிராக ஆசிரியர் ஒருவரின் இடமாற்றத்துக்கும் அவர் தடை விதித்திருந்தார். நகரசபைக் கட்டளைச் சட்டத்தின் 184 ஆவது பிரிவின்படி, உள்ளூராட்சி சபைகள் மீது விசாரணை நடத்தும் அதிகாரம் மாகாண உள்ளூராட்சி அமைச்சருக்கே உரியது. மாகாணசபைத் தேர்தல்களை நடத்த மறுக்கும் தற்போதைய அரசாங்கம், மக்கள் பிரதிநிதி அல்லாத ஆளுநரைப் பயன்படுத்தி, யாழ்ப்பாணத்தில் உள்ள எதிர்க் கட்சிகளின் கட்டுப்பாட்டு உள்ளூராட்சி சபைகளின் [illegible] முற்படுவதாகவே எண்ணத் தோன்றுகின்றது.

தமக்கு எதிராகத் தீர்ப்பளித்ததால் ஆளுநரும், அரசாங்கத்தின் மூத்த அமைச்சர் ஒருவரும் இணைந்து கொடுத்த அழுத்தங்கள் காரணமாகவே இந்த இடமாற்றம் நிகழ்ந்துள்ளதாக யாழ். சட்டத்தரணிகள் சங்கமும் ஜனாதிபதிக்கு கடிதம் மூலம் சுட்டிக் காட்டியுள்ளது. மேலும், இடமாற்றம் வழங்கப்படுவதற்கு முதல் நாள் பிரதம நீதியரசரால் இந்த வழக்குகளின் ஆவணங்கள் முறைசாரா வழிகளில் கோரப்பட்டதாகவும் நம்பகமான தகவல்கள் வெளியாகியுள்ளன.

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி பிறப்பித்த உத்தரவுகள் தொடர்பாக, வட மாகாண ஆளுநர் நீதிச்சேவை ஆணைக்குழுவுக்கு தொடர்புகொண்டு பேசியதானது, நீதியை நிலைநாட்டுவதில் இடம்பெற்ற முறையற்ற அப்பட்டமான தலையீடு என்பதை நீதியமைச்சர் ஒப்புக்கொள்கிறாரா? எனக் கேட்க விரும்புகின்றேன். 'ஆம்' எனில், நீதி நிலைநாட்டுவதில் தலையிட்ட ஆளுநருக்கு எதிராக அரசாங்கம் எத்தகைய ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுக்கவுள்ளது?

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ் உள்ளூராட்சி சபைகளை முடக்க நினைக்கும் பேரினவாத அரசின் இத்தகைய அரசியல் பழிவாங்கல்களுக்கு எதிராகவும், நீதித்துறையின் சுயாதீனத்தைப் பாதுகாக்கவும் நாம் தொடர்ந்து குரல்கொடுப்போம் - என்றார். (அ-ம-26)

## கடற்றொழிலுக்குச்...

தினம் இரவு இரண்டு மீனவர்கள் கடற்றொழிலுக்காகச் சென்றுள்ளனர். கடுமையான கடற்கொந்தளிப்புக் காரணமாக இரண்டு மீனவர்கள் படகிலிருந்து தூக்கி வீசப்பட்டு காணாமற் போயுள்ளனர். அவர்களை மீட்கும் பணிகள் நேற்று முன்னெடுக்கப்பட்ட நிலையில், காணாமற்போன மீனவர்களில் ஒருவர் படகுடன் மீட்கப்பட்டுள்ளார். மற்றைய மீனவர் நேற்று மாலைவரை மீட்கப்படாத நிலையில் அவரைத் தேடும் பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. (அ-ம-66)

## 350 இனைத்...

அடையாளம் காணப்பட்ட நிலையில், 7 என்புத் தொகுதிகள் மீட்கப்பட்டுள்ளன. இதையடுத்து, செம்மணிப் புதைகுழியில் இருந்து இதுவரை அடையாளம் காணப்பட்ட என்புத் தொகுதிகளின் எண்ணிக்கை 353ஆக அதிகரித்துள்ளது. அத்துடன் மீட்கப்பட்ட என்புத் தொகுதிகளின் எண்ணிக்கை 334 ஆக அதிகரித்துள்ளது.

யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்ற நீதிவான் எஸ்.லெனின்குமார் முன்னிலையில் அகழ்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. தொல்லியல் பேராசிரியர் ராஜ்சோமதேவா தலைமையிலான குழுவினர், சட்ட மருத்துவ அதிகாரி செல்லையா பிரணவன், குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள், சட்டத்தரணிகள், துறைசார் நிபுணர்கள், ருகுணு பல்கலைக்கழக மாணவர்கள் ஆகியோர் அகழ்வுப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். அத்துடன், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சார்பில் சட்டத்தரணி ரணித்தா அகழ்வுப் பணிகளில் முன்னிலையாகி வருகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## போதை...

வீதிக் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்ட அச்சுவேலி குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸாராலேயே இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றது. சந்தேகநபரிடம் இருந்து ஒருதொகை போதைமாத்திரைகள் மீட்கப்பட்டுள்ள நிலையில், அவரை நீதிமன்றத்தில் முற்படுத்தும் நடவடிக்கையை பொலிஸார் தற்போது முன்னெடுத்துவருகின்றனர். (அ-ம-23)

## ஐஸ்கிறீமால்...

பணிமனையில் அண்மைக்காலமாக உணவகங்கள், நடமாடும் வியாபார நிலையங்கள் என்பன தொடர்ச்சியாகப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன. இதன்படி, கடந்தவாரம் சங்கானை, சுழிபுரம் ஆகிய அராலி பொதுச்சுகாதாரப் பரிசோதகர் பகுதிகளில் திடீர் பரிசோதனைகள் இடம்பெற்றன. இதன்போது மூன்று பாண்விற்பனை வாகனங்கள், ஐஸ்கிறீம் விற்பனை வாகனம், மற்றும் உணவகங்கள் என்பன சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கியமை கண்டறியப்பட்டது.

சம்பந்தப்பட்ட பத்துத் தரப்பினருக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் வழக்குகள் தொடரப்பட்ட நிலையில், அன்றையதினமே அவை விசாரணைக்கு எடுக்கப்பட்டன. இதன்போது சுகாதாரச் சீர்கேட்டுடன் செயற்பட்ட 9 தரப்புகளுக்கு எதிராக ஒரு லட்சம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. சுழிபுரத்தில் சுகாதாரச் சீர்கேடான ஐஸ்கிறீம் விற்பனையில் ஈடுபட்டவருக்கு 6 மாதங்களுக்கு ஒத்திவைத்த 6 மாத கால சிறைத்தண்டனையும் 23 ஆயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது. (அ-ம-26)

## எமது...

னர். இராணுவத்தால் கைப்பற்றப்பட்ட தமது காணிகளை மீட்கும் நோக்கில் மயிலிட்டி மக்கள் ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமைகளில் போராட்டம் நடத்தி வருகின்றனர். இதன் தொடர்ச்சியாகவே எட்டாவது வாரமாக நேற்றும் இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வீ.கே.சிவஞானம், பருத்தித்துறை நகரபிதா வின்சென் டீ போல் டக்ளஸ் போல், வலி. தெற்கு பிரதேசசபை தவிசாளர், வலி.வடக்கு பிரதேசசபை தவிசாளர், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள், காணிகளின் உரிமையாளர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.


வலி. வடக்கில் இருந்து இராணுவம் வெளியேற வேண்டும் என்று வலியுறுத்தி, நாளைமறுதினம் திங்கட்கிழமை யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக பெரியதொரு போராட்டம் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# யாத்திரைக்குழுவுக்கு மருந்துப்பொருள்கள்

திருகோணமலை, ஜூன் 13
கதிர்காமக்கந்தன் ஆலயம் நோக்கிய பாத யாத்திரைக்குழுவினருக்கு, சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தால் ஒருதொகுதி மருந்துப்பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன. திருகோணமலை கும்புறுப்பிட்டி சித்திவிநாயகர் ஆலயத்தில் வைத்து 95 ஆயிரம் ரூபா பெறுமதியான மருந்துப்பொருள்கள் இவ்வாறு வழங்கப்பட்டுள்ளன. சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ. மோகனதாஸ் சுவாமிகள், ஆச்சிரமத் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று ஆறாம் கட்டமாக இந்த உதவியை வழங்கினார். (க-66)





## சுன்னாகம் தெற்கில் விசேட களத்தரிசிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 13
யாழ். மாவட்டத்தில் விசேட டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், உடுவில் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் களத்தரிசிப்புகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. சுன்னாகம் தெற்குப் பகுதியிலுள்ள சகல குடியிருப்புகளும் சோதனைக்குட்படுத்தப்பட்டன. உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் எஸ்.ஜெயக்குமார் தலைமையிலான சுகாதாரக்குளமுவினர் சோதனைகளை மேற்கொண்டனர். (க-17)



## ஆசிரியர் கலாசாலையில் உலக பனை தின நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூன் 13
கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் உலக பனை தினச் சிறப்பு நிகழ்வு, கலாசாலையின் ரதிலட்சுமி மண்டபத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.
கலாசாலையின் முதல்வர் செந்தமிழ்ச் சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், அச்சுவேலி பனை தென்னை அபிவிருத்திக் கூட்டுத்தாபனப் பொது முகாமையாளர் கிருஷ்ணன் வரதராஜா சிறப்புரை ஆற்றினார். நிகழ்வில் பனை எனும் ஆதாரம் எனும் தலைப்பில் கலாசாலையின் ஆங்கில நெறி ஆசிரிய மாணவி கௌசிகா நிரோஜனால் காணொளி தயாரிக்கப்பட்டுக் காட்சிப்படுத்தப்பட்டது. பனையும் தமிழ் இலக்கியங்களும் எனும் தலைப்பில் கலாசாலையின் விசேட கல்விநெறி ஆசிரிய மாணவி செல்வகுமாரி தியாகராஜா உரையாற்றினார். தொடர்ந்து அதிதிப் பேச்சாளர் கலாசாலையின் முகாமைத்துவக் குழுவினரால் கௌரவிக்கப்பட்டார். (க-66.27)

## யாழ். போதனா வளாகத்தில் மக்கள் வங்கி ஏ.ரி.எம். திறப்பு



யாழ்ப்பாணம், ஜூன் 13
யாழ். போதனா மருத்துவமனை வளாகத்தில் புதிய மக்கள் வங்கி தனது வாடிக்கையாளர் சேவை வலையமைப்பைமேலும் விரிவுபடுத் தும் நோக்கில் தானியங்கி இயந்திர சேவையை அண்மையில் திறந்துவைத்துள்ளது.
மருத்துவமனை சூழலைக் கருத்திற்கொண்டு அமைக்கப்பட்டுள்ள இந்த ஏ.ரி.எம். அனைத்து நாள்களிலும், 24 மணிநேரமும் எவ்வித தடையுமின்றிப் பணத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். இந்தச் சேவை மருத்துவமனைப் பணியாளர்கள், தங்கிச் சிகிச்சை பெறும் நோயாளிகள், அவர்களது உறவினர்கள் மற்றும் பொதுமக்களுக்கு எந்நேரத்திலும் பாதுகாப்பான மற்றும் எளிதான பணப்பரிவர்த்தனை வசதியை வழங்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## பருத்தித்துறையில் டெங்கு ஒழிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 13
யாழ். மாவட்டத்தில் விசேட டெங்கு நுளம்பு ஒழிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், பருத்தித்துறை பொதுச் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதிகளிலும், டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.
அரச, தனியார் அலுவலகங்கள் மற்றும் வர்த்தக நிலையங்கள் என்பவற்றில் கடந்த புதன்கிழமை களத்தரிசிப்பு மேற்கொள்ளப்பட்டது. பருத்தித்துறை பொதுச்சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவைச் சேர்ந்த டெங்கு ஒழிப்புப் பிரிவினர், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், இலங்கை செஞ்சிலுவைச் சங்க ஊழியர்கள், பொலிஸார் இணைந்து டெங்கு நுளம்பு பரவும் சூழல்கள் குறித்து சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர். (க-100)







அச்சுவேலி வடக்கில், குடும்பநல உத்தியோகத்தர் அலுவலகம் கடந்த புதன்கிழமை திறக்கப்பட்டுள்ளது. மடத்தடியை வசிப்பிடமாகக் கொண்ட தம்பு வடிவேலு ஞாபகார்த்தமாக 7 இலட்சம் ரூபா நிதி உதவியுடன் இந்த அலுவலகம் அமைக்கப்பட்டுள்ளது. (சு-23)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.06.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.